UNIVERSITY OF JAFFNA
LIBRARY
PERIODICAL DIVISION

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Register as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர் : 137
இதழ் : 01
பக்கங்கள் : 08
திகதி : 13.01.2013
விலை : 15.00

## ஆயர் பேரவை வன்னி விஜயம்

இலங்கையின் ஆயர் பேரவை தலைவர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் இலங்கையின் மறைமாவட்டங்களின் ஆயர்கள் பதினொருவர் வன்னிக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டனர். இவர்கள் வன்னியில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாக சந்தித்து அவர்களது அன்றாட நாளாந்த பிரச்சனைகளைக் கேட்டறிந்தனர்.

கடந்த தை மாதம் 09 திகதி வன்னிக்கு வந்த ஆயர் குழுவினரை யாழ். ஆயர் அவர்கள் கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் வரவேற்று தற்போதைய நிலைவரம் குறித்து ஆயர்கள் குழுவிற்கு எடுத்துரைத்தார். தொடர்ந்து ஆயர்கள் குழுவினர் கணேசபுரம் மகாவித்தியாலயத்தில் போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடிமர்த்தப்பட்டு சொல்லொண்ணா துன்பங்களை அனுபவிக்கும் எம் வன்னி வாழ் மக்களை சந்தித்து உரையாடினர். இச்சந்திப்பின் இறுதியில் கிளிநொச்சி வாழ் கத்தோலிக்கர்கள் தாம் அனுபவிக்கும் வேதனைகளை இதயக்குமுறல்களை மகஜர் வடிவில் ஆயர் குழுவிடம் கையளித்தனர்.





தொடர்ந்து மறுநாள் 10ம் திகதி ஆயர் குழு கிளிநொச்சியில் பணியாற்றும் மனிதநேய அமைப்பினரை சந்தித்து அவர்கள் பணி பற்றி கேட்டறிந்து கொண்டனர். தொடர்ந்து ஆயர் குழு பரந்தன் வழியாக புதுக்குடியிருப்பு சென்று மிக அண்மையில் மீள் குடியமர்த்தப்பட்டு வேதனையுறும் புதுக்குடியிருப்பு மக்களை தூய சூசையப்பர் ஆலயத்தில சந்தித்து உரையாடினர். பின்னர் இரணைப்பாலை மக்களைச் சந்தித்த ஆயர் குழு முல்லைத்தீவு சென்று கேப்பாபுலவில் சூரியபுரத்தில் மீள் குடியமர்த்ததப்பட்டு முகாம்களில் வாழும் மக்களையும் அவர்களின் வாழ்வியல் கஸ்ரங்களையும் நேரில் கண்டும், கேட்டும் அறிந்து கொண்டனர். மூன்றாம் நாள் குருக்கள், துறவிகளை கிளிநொச்சியில் சந்தித்த ஆயர் குழு தமது பயணத்தின் நோக்கத்தையும் அவர்கள் பெற்ற அனுபவத்தையும பகிர்ந்து கொண்டனர். குருக்கள், துறவிகள் ஆயர் குழு துன்பப்படும் மக்கள் மட்டில் அவர்களின் வேதனைகளை சர்வ தேசத்திற்கு எடுத்து இயம்ப வேண்டுமென்ற தேவையையும் எடுத்துரைத்தனர். ஆயர் குழுக்கள் கிளிநொச்சி மாவட்ட, முல்லை மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதிகளையும் அவர்கள் அலுவலகத்தில் சந்தித்து சமகால நிலைமை பற்றியும் மக்கள் எதிர்பார்ப்புப் பற்றியும் தளபதிகளுக்கு எடுத்துரைத்தனர்.

## யுத்தம் முடிந்து மூன்றாண்டாகியும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வில்லை

### பிரஞ்சுத் தூதுவரிடம் யாழ். ஆயர் எடுத்துரைப்பு



யுத்தம் முடிவுக்கு வந்து 3 வருடங்கள் கடந்த நிலையிலும், தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு வழங்கப்படவில்லை என்று யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் பிரஞ்சுத் தூதுவருக்குக் கூறியுள்ளார்.

குடாநாட்டிற்கு விஜயம் மேற் கொண்டிருக்கும் பிரான்ஸ் தூதுவர் திருமதி கிறிஸ்ரின் ரொபிசன் அங்கு பலதரப்பினரையும் சந்தித்து தற்போதைய நிலைவரங்கள் தொடர்பாகக் கலந்துரையாடி வருகிறார்.

அவர் நேற்று யாழ். ஆயரைச் சந்தித்த போதே ஆயர் தமிழ் மக்களின் கவலைகளைப பிரெஞ்சுத் தூதுவரிடம் எடுத்துரைத்தார். இந் சநதிப்பு குறித்து ஆயர் கூறியதாவது :

யாழ்ப்பாண மக்கள் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் இருக்கின்றனர் அவர்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாகச் சொல்லக் கூடியதாக உள்ளதா? அவர்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றனவா என என்னிடம் கேள்விகளைக் கேட்டிருந்தனர்.

கடந்த காலத்தில் இங்குள்ள மக்கள் பல பாதிப்புக்களையும் எதிர்நோக்கியிருந்த நிலையில், தற்போதும் அத்தகைய பாதிப்புகள் தீர்த்து வைக்கப்படாத நிலைமை உள்ளதைச் சுட்டிக் காட்டினேன்.

குறிப்பாக, இங்குள்ள மக்களுக்குப் பேச்சுச்சுதந்திரம் நிறைவாக இல்லை. (8ம் பக்கம் பார்க்க...)

## குருநகரில் ஓர் வேளாங்கண்ணி ஆலயம்



குருநகர் கடற்கரைப் பகுதியில் அமைந்திருந்த அன்னை வேளாங் கன்னிமாதா சிற்றாலயம் புதிய கோவிலாக நிர்மானிக்கப்பட்டு அணமையில் திறந்த வைக்கப்பட்டது.

கடற்பகுதியை மண்கொண்டு நிரப்பி அமைக்கப்பட்ட இப்புதிய ஆலயத்தை யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் ஆசீர்வதித்து திறந்து வைத்து முதல் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். புனித யாகப்பர் பங்கை சேர்ந்த இவ்வாலயதின் கட்டுமான திறப்பு விழா ஏற்பாடுகளை பங்குத்தந்தை அருட்பணி ஆர்.எக்ஸ். நேசராசா அடிகள் மேற்கொண்டிருந்தார்.

## உந்தன் நினைவினிலே

### இசைப்பேழைவெளியீடு



அருள்தந்தை அன்புராசாஅடிகளாரின் படைப்பில் உருவான 'உந்தன் நினைவினிலே' என்ற கிறிஸ்தவப் பாடல்கள் அடங்கிய இசைப் பேழை வெளியீடு 06.01.2013 அன்றுமாலை 4.30 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது. முதன்மை விருந்தினராக யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். அமல மரித்தியாகிகளின் முதல்வர் ம.போல் நட்சத்திரம், புனித பத்திரிசியார் கல்லூரி ஓய்வு நிலை ஆசிரியர் எ.எஸ். அகஸ்ரின், மன்னா பத்திரிகை ஆசிரியர் தமிழ்நேசன் அடிகள் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். இந்நிகழ்விற்கு திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குனர் யோ.யோண்சன ராஜ்குமார் (8ம் பக்கம் பார்க்க...)

## யாழ் மறைமாவட்டத்திற்கான ஓர் புதிய இணையத்தளம் உதயம்

யாழ் மறைமாவட்டத்திற்கான ஓர் புதிய இணையத்தளம் ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்புதிய இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வானது கடந்த டிசம்பர் 27ம் திகதி ஆயர் இல்லத்தில் யாழ் ஆயரின் தலைமையில் நடைபெற்றது.

புதிய இணையத்தளமானது யாழ் மறைமாவட்ட சமூக தொடர்சாதன மையத்தின் அனுசரணையுடன் யாழ் ஆயரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ் இணையத்தளத்தின் முகவரியானது www.jaffna diocese. org ஆகும்.

இவ் இணையத்தளத்தில் யாழ் மறைமாவட்ட செய்திகள், மறை மாவட்டம் சம்பந்தமான விபரங்கள், தரவுகள், மறைக்கோட்ட நடவடிக்கைகள் குருக்கள், துறவிகளின் விபரங்கள் முகவரிகள் தொலைபேசி இலக்கம் என்பனவற்றை வாசகர்கள் பார்த்தறியலாம்.

விரைவில் இத்தளத்தில் பயனுள்ள ஆக்கங்கள், பாதுகாவலன் பத்திரிகை என்பவற்றையும் பார்க்க வசதி செய்யப்படும்.

எற்கனவே WWW. Pathukavalan. com என்றும் தளத்தில் பாதுகாவலன் பத்திரிகையை இணையத்தில் பார்க்க முடியும்.

## ஏமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

# ஆயர்களின் வன்னி விஜயமும் உலக நாடுகளின் பார்வையும்

முப்பது ஆண்டு அஹிம்சைப் போராட்டம் முப்பது ஆண்டுகால ஆயுதப்போராட்டம் மொத்தமாக 60 ஆண்டுகள் துன்பங்களுடன் காத்திருந்தும் தமிழ் மக்களின் அர்சியல் அபிலாஷைகளுக்கு உரிய விடை கிடைக்கவில்லை. 2013ஆம் ஆண்டு பிறந்து விட்டது. தமிழர் புத்தாண்டாம் தைப்பொங்கலும் வந்துவிட்டது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழ்களின் நம்பிக்கை. இம்முறையும் அந்த நம்பிக்கைக்கு பலம் சேர்க்க மக்கள் விரும்புகின்றனர். அவர்கள் மனம் தளரவில்லை. 60ஆண்டு காலம் மனம் தளராமல் இருக்கும் மக்களை இன்னும் பல ஆண்டுகள் வரை காத்திருக்க வைக்காமல் அவர்களின் அரசியல் உரிமைகளை கையளிக்கும் ஏற்பாடுகளுக்கு உலக அரசியல் இடமளிக்க வேண்டும் என்பதுதான் இன்றைய வேண்டுகோள்.

2009ஆண்டு மே மாதத்துடன் யுத்தம் முடிந்து விட்டது என ஆட்சியாளர்கள் மார்தட்டி ஆர்ப்பரித்தாலும் அது வேறு பரிமாணத்தில் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது என்பதற்கு நடைமுறை விடயங்கள் சான்றாகும். இலங்கையின் அ்ரசியலமைப்பு தமிழர்களுக்கு சமநீதி வழங்கவில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டு. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் 1883இல் உருவாக்கப்பட்ட கோல்புறூக் யாப்பு முதல் இலங்கை 1948இல் சுதந்திரமடைந்து 1972இல் இறைமை அடைந்து உருவாக்கப்பட்ட யாப்புகள் வரை தமிழர்களுக்கு சமநீதி இல்லை என்பது வரலாறு.

1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பு 18திருத்தங்களுடன் தற்போதும் நடைமுறையில் இருக்கின்றது. இந்த யாப்பில் 1987இல் செய்யப்பட்ட 13ஆவது திருத்தம்தான் அதிகாரப்பரவாலக்கல் முறையாகும் இதுதான் தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வாகவும் கூறப்பட்டது. ஆனால் நடைமுறையில் அந்த அதிகாரங்களை காணவில்லை. இன்று அது பற்றி பேசினாலும் அரசியல் தீர்வு என்பது தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பின் அடிப்படையில் செய்ய முடியாது என்பது தமிழ்தரப்பு வாதம். இதனை உலக நாடுகளும் விளங்கிக் கொண்டுள்ளன.

ஆனாலும் நேர்மையான தீர்வுக்கான நேரடி அழுத்தங்களை உலக நாடுகளினால் இலங்கை அரசுக்கு கொடுக்கமுடியாமல் உள்ளது. வெறுமனே கண்டன அறிக்கைகள் எச்சரிக்கைகள் மாத்திரம் அரசாங்கத்தை திருத்துவதற்கு அல்லது வழிக்கு கொண்டு வருவதற்கு போதுமானவையல்ல. 60ஆண்டுகாலம் தமிழர்கள் கண்ட துன்பங்களுக்கு இலங்கை அரசு நோக்கிய உலக நாடுகளின் கண்டன அறிக்கைகள் ஒரு ஆறுதல் மாத்திரமே. அது அரசியல் தீர்வு அல்ல. கடந்தகால வரலாறுகளை மீளபார்வை செய்து தமிழர்களுக்கான சம அந்தஸ்தை உறுதிப்படுத்தும் வேலைத் திட்டங்களை உலக நாடுகளினால் முன்னெடுக்க முடியும்.

தமிழ் அரசியல் தலைமைகளினால் எதுவும் செய்ய முடியாது என்ற நிலை தற்போது வந்துவிட்டது அஹிம்சைப் போராட்டம், ஆயுதப்போராட்டம் என்று தொடராக போராட்டங்களை சந்தித்த மக்கள் மீண்டும் ஒரு போராட்டத்தை காண விரும்பவில்லை, ஆனால் அவர்களிடம் நம்பிக்கை இருக்கின்றது. தைரியம் உள்ளது. நிரந்தர அரசியல் தீர்வுக்கான சர்வதேச ஆதரவை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். தமிழர் போராட்டத்தில் கத்தோலிக்க திருச்சபையின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் அன்று முதல் இன்று வரை அரச உயர் மட்டங்களையும் சர்வதேச பிரதிநிதிகளையும் சந்தித்து தமிழர்களின் அவலங்களை எடுத்துரைத்தவர்கள் கத்தோலிக்க திருச்சபையின் ஆயர்கள். வடக்கு கிழக்கில் தற்போது நான்கு தமிழ் ஆயர்கள் பணிபுரிகின்றனர். இது தமிழர்களின் நில மரபுக்கான ஒரு அடையாளம். இலங்கை முழுவதிலும் உள்ள ஆயர்கள் கடந்த வாரம் வன்னிக்கு விஜயம் செய்து மக்களின் நிலைமைகளை அறிந்து கொண்டனர். நிச்சயம் வெளியுலகுக்கு அவர்கள் பேசுவார்கள். இது மக்களின் நம்பிக்கை.

அனைவருக்கும் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

**அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்**

# பிறக்க அருமையான நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு 63வது இடம்

இந்த 2013ம் ஆண்டில் மனிதர் பிறப்பதற்கு அருமையான நாடு எது என்ற ஆய்வில் இலங்கை 63வது இடத்தையும் இந்தியா 66வது இடத் தையும் பிடித்துள்ளன. முதலிடத்தை சுவிட்சர்லாந்தும், 75வது இடத்தை பாகிஸ்தானும் பிடித்துள்ளன.

"பிறந்தால் இந்த நாட்டில் தான் பிறக்க வேண்டும்" என்ற தலைப்பில், The Economist என்ற பன்னாட்டு நிறுவனத்தின் இணையதளம் சார்பில், பொதுமக்கள் மத்தியில் நடத்தப்படட கருத்துக் கணிப்பின அடிப்படையில், ஆசியாவில் சிங்கப்பூரே வாழ்வதற்கு சிறந்த இடம் எனத் தெரிய வந்துள்ளது.

இந்த கருத்துக்கணிப்பில் சீனா 49வது இடத்திலும், இரஷ்யா, 72வது இடத்திலும் பங்களாதேஷ் 77வது இடத்திலும், ஆபிரிக்க நாடான நைஜீரியா 80வது இடத்திலும் உள்ளன.

இது போன்றதொரு ஆய்வு 1988ல் எடுக்கப்பட்ட போது, 13வது இடத்தைப் பிடித்த சுவிட்சர்லாந்து, இப்போதைய கருத்துக்கணிப்பில் முதலிடத்தில் வந்துள்ளது. இரண்டாவது இடத்தை, ஆஸ்திரேலியாவும், அடுத்த இடங்களை நோர்வே, சுவிடன் மற்றும் டென்மார்க் நாடுகள பெற்றுள்ளன.

ஆறாவது இடத்தை சிங்கப்□ரும், எட்டாவது இடத்தை நெதர்லாந்தும், ஒன்பதாவது இடத்தை கனடாவும், 10வது இடத்தை ஹாங்காங்கும் பிடித்துள்ளன.

அமெரிக்காவும், ஜெர்மனியும், 16வது இடத்தில் உள்ளன. பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ஜரோப்பிய நாடுகளான, கிரீஸ், போர்த்துக்கல், இஸ்பெயின், ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் நாடுகள், இப்பட்டியலில் பின்தங்கியுள்ளன.

# 2012ம் ஆண்டு 20 இலட்சம் திருப்பயணிகள் — திருத்தந்தையைக் கண்டனர்



எட்டு ஆண்டுகள் பங்கேற்றோரின் எண்ணிக்கை 2 கோடியே, 5இலட்சத்து 44,970 பேர் என்ற விவரம் வத்திக்கான் நாளிதழலான L'Osservatore Romano வில் வெளியாகியுள்ளது.

கடந்த 2012ம்ஆண்டு திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கலந்துகொண்ட நிகழ்வுகளில் 20 இலட்சம் திருப்பயணிகள் அவரைக் கண்டனர் என்ற தகவலை திருத்தந்தையின் இல்ல அலுவலகம் வெளியிட்டுள்ளது.

திருத்தந்தையின் நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்கள் 23,51,200 பேர் என்றும், இவர்களில் 12,56000 பேர் திருத்தந்தை வழங்கிய மூவேளை செப உரைகளிலும் 4,47000 பேர் திருத்தந்தை வழங்கிய புதன் பொது மறை போதகங்களிலும் கலந்து கொண்டனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

திருத்தந்தை தலைமையேற்று நடத்திய திருவழிபாடுகளில் கலந்து கொண்டோர் 5,01,000 என்றும், ஏனையக் கூட்டங்களில் கலந்துகொண்டோர் 1,46,800 பேர் என்றும் கூறப்படுகிறது.

திருத்தந்தை 16ம் பெனடிக்ட் தலைமைப் பொறுப்பேற்ற 2005ம் ஆண்டிலிருந்து எடுக்கப்பட்டுள்ள ஒரு கணக்கெடுப்பின்படி, அவரது நிகழ்வுகளில் கடந்த

# உலக இளையோர் நாளையொட்டி பிரேசில் நாட்டின் ஏற்பாடுகள்

இவ்வாண்டு ஜீலை மாதம் 23ம் திகதி முதல் 28ம் திகதி முடிய பிரேசில் நாட்டின் Riode Janeiro நகரில் நடைபெற உள்ள உலக இளையோர் நாளையொட்டி, அந்நாட்டின் மற்றொரு பெருநகரான Sao Paoloவில் 40,000க்கும் அதிகமான இளையோர் தங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் கலந்து கொள்ளும் இந்த முக்கிய நிகழ்வுக்கென பல்வேறு நாடுகளில் இருந்தும் வருகை தரும் இளையோரை வரவேற்க, அந்நாட்டின் பல குடும்பங்கள் தயாராக உள்ளன என்றும் இக்கூட்டத்தின் அமைப்பாளர்களில் ஒருவரான அருள்தந்தை ரொபோட்டோ கூறினார்.

ஏனைய நாடுகளில் இருந்து வரும் இளையோருடன் தொடர்பு கொள்வதற்கென அடிப்படைத் தகவல் பரிமாற்றங்கள் அடங்கிய பன்மொழி கையேடு ஒன்றும் தயாராகி வருவதாகவும் அருட்தந்தை ரொபோட்டோ கூறினார்.

இளையோரைத் தங்க வைப்பதற்கென்று முன்வரும் குடும்பங்கள் மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதாகவும் உலக இளையோர் நாளின் அமைப்பாளர்கள் கூறியுள்ளனர்.

# 2012ம் ஆண்டில் 12 திருப்பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் - Fides அறிக்கை -

கடந்து சென்ற 2012ம் ஆண்டில் 12 திருப்பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று Fides செய்தி நிறுவனம் வெளியிடும் இத்தகவலின்படி, கடந்த ஆண்டு 10 அருள்பணியாளர்கள், ஒரு அருட்சகோதரி மற்றும் அருள்பணியில் ஈடுட்டிருந்த ஒரு பொதுநிலையினர் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட பன்னிருவரில், ஆறுபேர் லத்தீன் அமெரிக்காவிலும், நான்கு பேர் ஆப்ரிக்காவிலும், இருவர் ஆசியாவிலும் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வருள்பணியாளர்களின் கொலைகள் உலக ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கவில்லை என்றும், இவர்கள் அமைதியான முறையில் தங்கள் விசுவாசத்திற்கு சான்று பகர்ந்துள்ளனர் என்றும் Fides அறிகை மேலும் கூறுகின்றது.

கொல்லப்பட்ட திருப்பணியாளர்களை மறைசாட்சிகள் என்றும் தீர்மானிப்பது திரு அவையின் பொறுப்பு என்று கூறும் இவ்வறிக்கை, இவர்கள் கொல்லப்பட்டச் சூழலின் அடிப்படைடில் இத்தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளது.

# 2015ம் ஆண்டின் ஐ.நா.வின் இலக்கை இந்தியா எட்டாது, சமூக ஆர்வலர்கள்

உலகின் ஏழ்மை, பசி, குழந்தை இறப்பு போன்றவற்றை 2015ம் ஆண்டுக்குள் பாதியாகக் குறைப்பதாக ஐ.நா.வின் 191 உறுப்பு நாடுகள் இரண்டாயிரமாம் ஆண்டில் நிர்ணயித்த இலக்கை இந்தியா எட்டாது என பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இந்தியா இந்த இலக்கை எட்டுவதற்கு அதன் ஏழ்மை நிலை 23.9 விழுக்காடாக இருக்க வேண்டும். ஆனால் அந்நிலை நிர்ணயித்ததைவிட 3 விழுக்காட்டுக்கு சற்று அதிகமாக இருக்கின்றது. அதேபோல் குழந்தை இறப்பும் ஆயிரத்துக்கு 27 ஆக இருக்க வேண்டும், ஆனால் அது 43 ஆக இருக்கின்றது எனத் தெரிகிறது.

ஆயினும், 2015ம் ஆண்டுக்குள் அனைத்து இந்தியச் சிறாருக்கும் ஆரம்பக்கல்வி வழங்கப்பட்டிருக்கும் என்ற உறுதியை இந்தியா கொடுத்திருப்பதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

## வடக்குக் கிழக்கில் மாணவர்களின் பாடசாலை இடை விலகல் அதிகரித்துள்ளது

உள்நாட்டுப் போருக்குப் பின் வடக்குக் கிழக்கு பாடசாலகளில் இருந்து இடை விலகுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்திருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. 2011ம் ஆண்டில் மட்டும் ஒரு லட்சத்தி இருப்தையாயிரம் மாணவர்கள் கல்வி ஆண்டின் நடுப்பகுதியில் பாடசாலைகளில் இருந்து விலகியிருப்பதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. 38,321 மாணவர்கள் வடமாநிலக் கல்விக்கூடங்களில் இருந்தும் இடையில் விலகியிருப்பதாக கல்வி அமைச்சகம் கூறுகின்றது.

நாட்டில் இலவசக் கட்டாயக் கல்வி நடைமுறையில் இருக்கின்ற போதிலும் இவ்வாறான இடைவிலகல்கள் வருத்தத்திற்குரியதே.

## ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான இலங்கையர் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர் - ஐ.நா. -

உலகில் வேறு நாடுகளில் புகலிடம் தேடும் மக்களில் அதிகமான எண்ணிக்கையைக் கொண்டுள்ள நாடுகளில் இலங்கை 12வது இடத்தை வகிக்கின்றது என ஐ.நா. அறிக்கை ஒன்று கூறுகின்றது.

44 தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் கடந்த ஆண்டில் 8,521 இலங்கை மக்கள் புகலிடம் தேடியதாகவும், இவ்வெண்ணிக்கை 2010ம் ஆண்டைவிட சற்றுக் குறைவு எனவும் அவ்வறிக்கை கூறுகின்றது.

மேலும், இலங்கையில், சிறார் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினம் ஜனவரி 4ம் திகதியன்று ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்படும் என, தேசிய சிறார்ப் பாதுகாப்பு அமைப்பு அறிவித்துள்ளது.

# 2013ல் விசுவாசத்தில் பயணிப்போம்

படைகளின் தலைவன், படைப்புக்களின் முதல்வன் படைத்த உலகில் படைக்கப்பட்ட உயிரினங்களின் நிலையினையும், நிலையாமையும் நொடிப் பொழுதினில் மீட்டிப் பார்க்கும் வேகமான, விவேக யுகத்தில் வாழ்வை நோக்கிப் பயணிக்கும் சமகால சூழ்நிலையில் மீண்டும் ஓர் புதிய ஆண்டில் கால் பதித்துள்ளோம்.

இன்பத்தில் துன்பம், துன்பத்தில் இன்பம் இறைவன் வகுத்த நியதி' என்ற கவியரசு கண்ணதாசனின் அர்த்தம் பொதிந்த வரிகள் சம காலத்திலும் எம்மக்களின் துன்பியல் வாழ்விற்கு விடையளிப்பதாக உள்ளது.

பூமி சூரியனைச் சுற்றுவதும், சூாியன் □மியைச் சுற்றுவதும் விஞ்ஞானம் கண்ட உண்மை. இந்த அறிவியலின் தேடல் அதிகரிக்க அதிகரிக்க அகிலத்தில் மாற்றங்களும் ஏற்பட்டு மனித வாழ்வின் நோக்கையும், இலக்கையும் திசை திருப்பி இயற்கை அனர்த்தங்களையும், போரின் கொடூர விளைவுகளையும் அநாகரீகப் பண்பாட்டினையும் ஏற்படுத்தி மனித வாழ்வையே கத்தியின் மீது நடக்கும் இக்கட்டான சூழ்நிலைக்கு உள்ளாக்கியுள்ளது. இந்நிலையில் யார் எமக்கு விடுதலை அளிப்பார்? எமக்கு நம்பிக்கை அளிப்பவர் யார்? என்ற ஏக்கங்கள் சூழ்ந்த நிலை



யிலேயே உலக மீட்பரின் பிறப்பு விழாவையும் கொண்டாடினோம்.

உலக அறிவியலின் வேகமான வளர்ச்சியில் புரளும் மனித வாழ்க்கை ஆக்கம் மிகுந்த தகவல்களையும், அதே வேளை மறுபுறத்தில் அச்சுறுத்தல்களையும், அழிவுகளையும் உருவாக்கும் தகவல்களையும் வெளியிட்டு மனித மாண்பையே சீர்குலைக்குமளவிற்கு சென்று விட்டது மட்டுமன்று அழிவுறாத ஆன்மீகத்தையே ஆட்டம் காண வைத்துள்ளது என்பதை உணர முடிகின்றது. இவற்றுடன் அரசியல் பொருளாதார சமூக கலாச்சார அச்சுறுத்தல்களும் மனிதத்தில் மிளிரும் புனிதத்தைக் கரைத்து விடக் கங்கணம் கட்டி நிற்கின்றன என்பது போரின் கொடூரத் தாக்கத்திற்கு உள்ளாகித் தவிக்கும் மக்களின் குரலொலியாக ஒலிக்கிறது. இந்நிலைக்கு எமது நாடும் குறிப்பாக தமிழ் இனமும் விதிவிலக்கானது அல்ல என்பதற்கு அன்றாட ஊடகச் செய்திகளே ஆதாரமாக உள்ளன.

மேற்குறிப்பிட்ட உலகியல் நிலையில் நின்று ஒருபடி உயர்ந்து, திருச்சபையால் முன்வைக்பட்ட விசுவாச ஆண்டு' என்ற தொனிப் பொருளும் கிறிஸ்தவர்களாகிய எமக்கு சவால் விடுக்கின்றதாக உள்ள நிலையிலேயே இப் புதிய ஆண்டை எதிர் கொள்கின்றோம்.

இன்று எம் மத்தியில் மெசியாவாகிய இயேசுக்கிறிஸ்து எம்மிலே எதிர்பார்ப்பது என்ன? என்பது எம்மிலே நாமே வினவப்பட வேண்டிய வினாவாகும். காலத்தின் தேவையுணர்ந்து கத்தோலிக்க திருச்சபையும் ஆண்டுக்கொரு கருப்பொருளினையும் அதற்கான செயல் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தும் போது பரம்பரைக் கத்தோலிக்கர் என்ற பட்டத்தைச் சூட்டிவாழும் எமது பங்களிப்பு எமது விசுவாச ஆழத்தை மேலோங்கச் செய்யுமளவிற்கு உயிரோட்டமாக அமையுமா? அல்லது இதுவும் நாளாந்த அல்லது வருடாந்த நடைமுறைகளில் ஒன்றுதான் என்ற அசமந்த போக்கிலேயே வாழ்கின்றோமா? என்பதை, எம் கைத் தொலைபேசி அழுத்தும் அதிகத்தைவிட, எமது ஆன்மீக வாழ்வை மேலும் மேலும் அழுத்திக் பார்க்க வேண்டிய சந்தர்ப்பமாக இதனை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஏனெனில் புனித யாக்கோபு கூறுவது போன்று தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச் சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால், அதனால் பயன் என்ன? (யாக்: 2:14) என்பதற்கு ஏற்ப எமது ஆன்மீக வாழ்வானது செயல் வடிவம் பெறும் உயிரோட்ட நிலையாக விளங்க வேண்டும் என்பதே திருச்சபையால் முன்வைக்கப படும் செயற்பாட்டின் எதிர்பார்பாகும். அதுவே பாலகன் இயேசுவும் எம்மிடம் கேட்டுநிற்கும் வேண்டுகோளுமாகும்.

சமகால சூழ்நிலையில் எம் மத்தியில் விடுதலைக்காக அமைதி வாழ்விற்காக சுதந்திரத்திற்காக வளமான வாழ்விற்காக ஏங்கி நிற்கும் உள்ளங்கள் பலரது கரங்களையும் பேச்சொலிகளையும் எதிர் பார்த்து ஏமாற்றம் அடைந்து மனம் சோர்ந்த நிலையில் வாழ்வளிக்கும் இறைவனது திருமுக ஒளிதன்னும் எம்மை நோக்கித் திரும்பாதா? என ஏங்கி நிற்போரின் முகங்களையும் நாம் அறியாதவர்கள் அல்ல.

உதாரணமாக, முப்பது ஆண்டுப் போரின் ஆற்ற முடியாத சோகங்களையும், மீளப்பெற முடியாத உயிர், உடமை இழப்புக்களும்தான் தம் வாழ்வின் மீதமான சொத்துக்கள் என்று எண்ணி வாழும உள்ளங்களும், தம் சொந்த மண்ணே தமக்கு உரிமை இல்லை என்ற அளவிற்கு விஞ்சிவிட்ட காணி சுவீகரிப்புக்களும், மீளக் குடியமர்ந்த போதும் அடிப்படை வசதிகள் அற்று தொடரும் கொட்டில் வாழ்வுகளும், வாழ்வாதார வழிமுறைகள் அற்ற பட்டினி நிலைகளும், நீதிக்கான விடுதலை வேண்டி சிறைச்சாலையே தஞ்சமாகக் கொண்ட அடிமைத்தனங்களும், மனித மாண்பையும், சமய சமுதாய கலாச்சார விழுமியங்களைச் சீரழிக்கும், தகாத தொடர்பாடல்கள், அநாகரீக வாழ்வியல் கோலங்கள், அழுத்தம் மிகுந்த அரசியல், பொருளாதார நெருக்கடிகள், அறிவியலின் வேகத்தில் ஆண்டவனை மறந்து மறுதலித்து வாழும் மண வாழ்வுக் கோலங்கள் என்று எம் சமகால சமூகநிலைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இவை குறிபபிடத்தக்க (6ம்பக்கம் பார்க்க...)

# படித்து விட்டீர்களா?

**"என் பாடத்தைப் படித்து முடித்துவிட்டேன்" என்று சொல்ல முடியுமா? அது சரியா?**

"பாடத்தைப் படித்துவிட்டாயா?" பெற்றோரும், ஆசிரியர்களும் மாணவர்களை நோக்கி அடிக்கடி கேட்கும் கேள்விதான் இது.

"படித்து முடித்துவிட்டேன்" என்று பதில் சொல்பவர்கள் குறைவுதான். ஆனால் "படித்துவிட்டேன்" என்று நல்ல மாணவர்கள் கொஞ்சம் தயக்கத்தோடு சொல்வார்கள். சாதாரண மாணவர்கள் கொஞ்சம் துணிவோடு சொல்வார்கள்.

இந்த விடை சரியா? சரியில்லை. இரண்டு வகைகளில் சரியில்லை.

ஒன்று, எதையும், எப்போதும், யாரும் முழுமையாகப் படித்து முடித்துவிட்டதாகச் சொல்லிவிட முடியாது. நமது அறிவு வளர, வளர நாம் அறியாதவை இன்னும் ஏராளம், ஏராளம் இருக்கின்றன என்கிற தெளிவு தோன்றும்.

எந்தச் சிறிய அறிவுத் துறைக்கும், எந்தப் பள்ளிப் பாடத்துக்கும் இது பொருந்தும். எனவே, "எல்லாம தெரியும்" என்கிற மனப்போக்கு ஒருபோதும் நம்மிடம் வளரக் கூடாது. படிக்கப் படிக்க பணிவு வளர வேண்டும். இது ஒரு முக்கியமான வாழ்க்கை நெறிதான். ஆனால், இங்கே இரண்டாவது காரணத்தைத்தான் கொஞ்சம் விரிவாகப் பார்க்கப் போகிறோம்.

கற்றல் என்பது வெறும் படிப்போடு முடிவதில்லை. ஒரு பாடத்தை ஒரு முறை வாசித்துவிட்டால் வேலை முடிந்துவிட்டது என்று நினைத்துக் கொள்பவர்கள் பலர் இருக்கிறார்கள்.

உண்மையில் நாம் வாசித்ததெல்லாம் அப்படியே நினைவில் நின்று விடுமானால்.... நாம் பள்ளிக்கே போக வேண்டாம். ஆசிரியர் சொல்வதைக் கேட்க வேண்டாம். எழுதிப் பார்க்க வேண்டாம். கணக்குகளைச் செய்து பார்க்க வேண்டாம்.

வீட்டில் இருந்தபடியே இரண்டு மாதத்துக்குள் ஒரு வகுப்பு நூல்களைப் படித்துவிடலாம். தேர்வை எழுதிவிடலாம் அல்லது இரண்டு மாதப் படிப்பு, பத்து மாத விடுப்பு என்று வாழ்க்கையை ரசித்து மகிழலாம்.



நினைத்துப் பார்க்கவே இனிமையாக இருக்குமே! ஆனால், நமது போதாத காலம், நமது மூளை இப்படி வேலை செய்வதில்லை.

நாம் ஒரு முறை வாசித்தவுடன் அந்தச் செய்திகளை எல்லாம் அப்படியே நினைவில் வைத்துக் கொள்வதில்லை. வாசிக்கும்போது கொஞ்சம், கேட்கும்போது கொஞ்சம் செய்து பார்க்கும்போது இன்னும் கொஞ்சம். இப்படி ஒவ்வொரு முயற்சியிலும் நாம் சேகரிக்கும் செய்தி நினைவில் பதிகிறது.

கல்வியாளர்கள் எந்தக் கல்வி முயற்சியில், எந்த அளவு படித்த செய்தி நினைவில் பதிகிறது என்று மதிப்பீடு செய்திருக்கிறார்கள். தனித் தனி மதிப்பீடுகளில் கொஞ்சம் வேறுபாடுகள் தெரிகின்றன.

**அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகள் இதோ...**

வாசித்தல் 20%
கேட்டல் 30%
செய்முறையைப் பார்த்தல் 40%
நாமே பேசுதல் 50%
நாமே செய்தல் 60%
ஐந்து பணிகளும் 90%

இங்கே நாம் குறிப்பிடும் ஒவ்வொரு பணியும் முக்கியம். ஒவ்வொரு பணியும் நமது மூளையின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் செய்தியைப் பதிக்கிறது. எல்லாப் பணிகளும் சேரும்போதுதான் மிகச் சிறந்த விளைவுகள் உண்டாகிறது.

இங்கே நாம் குறிப்பிடும் ஒவ்வொரு பணியும் ஒரு வகைச் செயல்திறன். இந்த ஒவ்வொரு செயல்திறனையும் வளர்ப்பதில் நாம் பயிற்சி பெற வேண்டும். இந்த உத்திகள் பற்றித்தான் தொடர்ந்து நாம் பேசப் போகிறோம். பேசி வருகிறோம்.

இப்போது நாம் இந்தப் பட்டியலில் மிகமிக அதிகம் பயன் தரக் கூடிய பணிகள் பற்றிப் பார்க்கலாம்.

நாமே செய்து பார்ப்பதுதான் கல்வித் திறன்களில் மிக மிக முக்கியமானது.

சமையல் குறிப்புகளை மனப்பாடம் செய்துவிட்டால் சமையல் தெரியும் என்று சொல்லிக்கொள்ள முடியுமா...? என்ன? சமைத்துப் பார்க்க வேண்டாமா? ஒவ்வொரு பாடத்துக்கும் செய்முறைப்பயிற்சி இருக்கிறது நாம் படித்தது எந்த அளவு புரிந்திருக்கிறது என்பதை நாமே மதிப்பிட்டுக் கொள்ள இந்தப் பயிற்சிகள் உதவும்.

இன்றெல்லாம் எல்லாப் பாடத்துக்கும் குறிப்பேடுகள் வந்துவிட்டன. போதாக்குறைக்குத் தெருவுக்குத் தெரு தனிப்பயிற்சி வகுப்புகள்! முடிந்தவரை இவற்றைத் தவிர்ப்பது நல்லது.

நமது நூலில் உள்ள பயிற்சிக் கேள்விகளை நாமாப் படிப்போம் விடையைக் கண்டுபிடிக்க முடிகிறதா என்று பார்ப்போம் தேவைப் படும் போது மட்டும் குறிப்பேடு களைப் பயன்படுத்துவோம். ஆசிரியர் தரும் பயிற்சிகளை விடவும் கூடுதல் பயிற்சிகள் தேவைப்பட்டால் மட்டும் தனிப்பயிற்சி வகுப்புகளுக்குச் செல்வோம்.

ஒவ்வொரு பாடத்துக்குமே நாமே செய்து பழக வேண்டிய பயிற்சிகள் உண்டு. மொழிப் பாடம் கட்டுரைகளை மனப்பாடம் செய்து ஒப்பிப்பதற்காக மட்டும் அல்ல, அந்த மொழியை முறையாகப் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்வதுதான் நோக்கம்.

வார்த்தை விளையாட்டுக்கள் மூலம் புதுப்புது வார்த்தைகளை நினைவில் பதிக்கலாம். தொடர்ந்து வாசிப்பதன் மூலம் இயற்கையாகவே இலக்கணப் பிழையின்றி எழுதப் பழகலாம்.

கொஞ்சம் புதிய மொழியில் பேசலாம். சொந்தமாதகச் சில விடைகளை எழுதிப் பார்க்கலாம்.

(6ம் பக்கம் பார்க்க...)

# சவாலின் அறிவு

தன் மகளுக்குத் திருமணம் செய்ய முடிவெடுத்த ஒருவர் போட்டியொன்றை அறிவித்தார். உலகத்திலேயே அதிக இனிப்பான ஒரு பொருளையும், அதிக கசப்பான ஒரு பொருளையும் கொண்டு வருபவர்களுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து தருவதாக அறிவித்தார். பல்வேறு பொருட்களோடு பலர் வந்து நின்றனர். அவர்களுக்கிடையே எவ்வித ஆரவாரமும் இல்லாமல் சிறுபெட்டி ஒன்றுடன் நிற்கும் இளைஞனைக் கண்டார் அந்தப் பெரியவர். அவனிடம் சென்று "உலகத்திலேயே அதிக இனிப்பான பொருள் எது எனக் கேட்க, அவன் அந்தப் பெட்டியைக் காட்டினான். அதிகக் கசப்பான பொருள் எது எனக் கேட்க அதற்கும் அவன் அந்தப் பெட்டியையே காட்டினான். ஆச்சரியத்தோடு அவர் அந்தப் பெட்டியைத் திறந்தார். அதற்குள் மனித நாக்கு ஒன்றுடைய படம் இருந்தது.

நாக்கு என்பது தீயைப் போன்றது. எப்போதும் அதில் கவனம் அதிகமாயிருத்தல் வேண்டும். மனிதப் படைப்பில் அவனுக்கு மிகப் பெரிய சவாலாக இருப்பது அவனது நாக்கே. காலச்சூழல், இடச் சூழல் இவற்றை ஆராய்ந்து நம்முடைய நாக்கை உலவவிடுதல் அவசியமானதாகின்றது. நமக்குள்ளே ஒட்டியிருக்கும் மனத்தைச் சரியாக நெறியாள்ளை செய்வது சொல்லே ஆகும் காரணம் மனிதனுக்கு உள்ள பெரிய சவால் அவனது நாவே.

மனிதச் சமூகத்தை மானுடவியலாளர் இரண்டாகப் பகுக்கின்றனர். ஒருவர் உயர்ந்த மனிதர்கள் (The great Man) மற்றொருவர், மீமனிதர்கள் (The super Man). ஆனால் இரண்டு பேருமே சமூகத்தின் இருண்ட பக்கங்களில் ஒளி பாய்ச்சும் திறன் படைத்தவர்கள். சமூக அழுக்குகளால் ஏற்பட்ட சவாலகளுக்கெதிராக அறிவாயுத்தால் சாட்டை எடுக்கத் துணிந்து வென்றவர்கள்.

"கருணை, தொண்டு, இரக்கம் என உள்ளது உங்கள் பணி: அது எப்படி சாத்தியமாயிற்று?" என டால்ஸ்டாய் என்ற அறிஞரைப் பார்த்துக் காந்தியடிகள் கேட்டார். அதற்கு டால்ஸ்டாய், "நீ எந்தச் சமூகத்தில் வாழ்கிறாயோ, உன் சாவு சவால் நிறைந்ததாகி அந்த மக்களின் ஒரு சொட்டுக் கண்ணீரை வருவிக்குமாறு உன்னால் வாழ முடிந்திருக்கிறது என்றால் அந்த மரணத்தைப் பிச்சை எடுத்தாவது பெற்றுக்கொள் என்ற வரிகள்தான் என்னைச் சமூகத்திற்கான வினாவாக மாற்றியது" என்று பதில் கூறினாராம்.

ஒரு பேராசிரியரும், குடியானவரும் தொடர்வண்டி ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தனர். பேராசிரியர் குடியானவரிடம் நமக்குள் ஒரு போட்டி... விடுகதைப் போட்டி. நான் தோற்றால் இரண்டு ரூபாய் தருவேன். நீ தோற்றால் ஒரு ரூபாய் தந்தால் போதும். ஏனென்றால் நீ படிக்காதவன் என்றார். ஒப்பந்தத்திற்குப் பின்



போட்டி தொடங்கியது.

குடியானவர், "எட்டுக்கால், ஒன்பது கை, பத்து வால்" அது என்ன? எனக் கேட்டார். பேராசிரியரால் பதில் கூற முடியவில்லை. நெடு நேரத்திற்குப் பின் தோல்வியை ஏற்றுக்கொண்டு இரண்டு ரூபாயை நீட்டினார். குடியானவர் அதை வாங்கிக் கொண்டு 'எனக்கும் பதில் தெரியவில்லை" என ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு இறங்கினார். பேராசிரியர் வெட்கத்தால் தலை கவிழ்ந்தார்.

எப்படி, சாதிப்பதற்கும் வயதுக்கும் சம்பந்தம் இல்லையோ அதைப் போலவே கல்விக்கும், அறிவிக்கும் சம்பந்தம் இல்லை எனப் புரிந்துகொண்டார். அறிவு வெறும் கல்வியால் வருவதன்று. அனுபவம், மன ஆளுமை, பயிற்சி, ஏமாற்றம், இழப்பு, மகிழ்ச்சி, சவால் உட்பட ஆயிரம் வழிகள் உள்ளன. அறிவு வளர்ச்சி பெற, தெளிவான அறிவும், துணிவான நெஞ்சும், கனிவான செயலும், ஓயாத உழைப்பும், தளராத நம்பிக்கையும் ஒன்றோடு ஒன்று ஒன்றிணையும் போது தொடர் வெற்றிகளைப் பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் தொடர்வோம் நம் இதயம் இயங்கும் வரை...!

# திருமணத்தை பதிவு செய்!

அருட்திரு. சேவியர்

கேத்ரீன் ஒரு கிறிஸ்தவப் பெண். அவளது பெற்றோர்கள் அவளைப் படிக்க வைத்தார்கள். ஆனாலும் அவள்மீது அதிகமான அன்போ, அக்கறையோ அவர்கள் காட்டியது கிடையாது. இருப்பினும் தனது விடாமுயற்சியினால் திறமையாகப் படிப்பை முடித்து ஒரு ஐ.டி நிறுவனத்தில் நல்லதொரு பணியில் அமர்ந்தாள். அதன் பின் அவள் விரும்பியதெல்லாம் அவளுக்குக் கிடைத்தது. சில ஆண்டுகளில் அவளுக்குப் பதவி உயர்வும் கிடைத்தது. செல்வச் செழிபான வாழ்க்கைக்கு மத்தியில் பெற்றோர்களுக்குப் பணம் அனுப்புவது, வாரம் ஒரு முறை அவர்களோடு அலைபேசி வாயிலாக உறவாடுவது என்னும் அளவில் அவர்களுடன் அவளுக்கு உறவு தொடர்ந்தது.

இதனிடையே அவளுடன் வேலை பார்க்கும் இளைஞர் ஒருவர் அவளுக்கு அறிமுகமானார். அறிமுகம் அன்பாகி வளர, திருமணம் செய்துகொள்ள இருவரும் விரும்பினர். இத்திருமணத்திற்குத் தனது பெற்றோரின் சம்மதத்தைப் பெறுவது சாத்தியமில்லை என எண்ணிய கேத்ரீன் அவர்களுக்குத் தெரியாமலேயே அவனின் கரம் பிடிப்பது குறித்து தோழிகளிடம் ஆலோசனை செய்தாள். "நானே படித்து நானே வேலை தேடிக் கொண்டேன். எனது துணை இன்னாரென தீர்மானிக்கவும், எனக்குத்தானே உரிமையிருக்கிறது" என்று வாக்குவாதம் செய்த கேத்ரீனிடம் "ஒரு வேளை உன் பெற்றோர் உன்மீது ஆழமான அன்பும், கரிசனையும் காட்டாமல் இருந்திருக்கலாம். இதை மனதில் வைத்துக்கொண்டு பெற்றோரே இல்லையென்று அவர்களைத் தள்ளி வைத்து விடாதே. திருமணத்திற்கு முன்பும், பின்பும் ஆலோசனை தந்து உற்சாகப்படுத்தி உதவி புரிவது பெற்றோர் மட்டுமே. உனது திருமணத்திற்காக எந்த முயற்சியும் எடுக்காமல் கூட இருந்திருக்கலாம். ஆனால் உன் திருமணத்தைப் பார்க்க அவர்கள் ஆசைமேல் ஆசையாய் இருப்பார்கள்" என்று கூறிய அவளது தோழிகளின் பேச்சுக்கள் அவளிடம் எடுபட வில்லை.

திருமணத்தைப் பதிவு செய்யாமல் வெறுமனே மாலை மாற்றிக் கொண்டு கணவன் - மனைவியாக வாழ்வது என்னும் தங்களின் திட்டத்தைக் கெத்ரீன் வெளியிட்ட போதுஅவளது தோழிகள் அதிர்ந்து போனார்கள். பார்த்துப் பாாத்து அமர்க்களமாக நடத்தப்படும் திருமணங்கள் சில வேளைகளில் தவிப்பில் முடிந்துபோகின்றன. திருமணத்தைப் பதிவு செய்யாமல் வாழ நினைப்பது மிகவும் ஆபத்தானது என்ற அவளது தோழிகளின் கண்டிப்பான சொற்களை கேத்ரீன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. சொந்த பந்தங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு தான் நேசித்தவனோடு மாலை மாற்றிக் கொண்டு தன் திருமண வாழ்வை அவள் ஆரம்பித்தாள்.

சில மாதங்களிலேயே அவளுக்கும், அவளது கணவனுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தன. தொடர்ந்து அது தாகரமாக வெடித்தது. வரட்தணை, சாதி வேறுபாடு, மத நம்பிக்கைகள், வருமானம் என பல்வேறுகாரியங்கள் குறித்து கடுஞ்சொற்களை கோபவெறியோடு ஒருவர் மீது ஒருவர் வீசியெறிந்தனர். அவ்வப்போது கைகலப்பும் ஏற்பட்டது. அவ்வேளையில் அவளது தோழிகளைத் தொடர்புகொள்ள அவள் மனம் ஏங்கினாலும் அவ்ளது ஈகோ அதற்கு இடம் கொடுக்கவில்லை. பெற்றோரைச் சந்திப்பதற்கோ அவளது கணவன்



அனுமதி தரவில்லை. அவர்களுக்கு ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த சில மாதங்களில் அவளது கணவன் தலைமைறவானான். எங்கெங்கோ விசாரித்துப் பார்த்தும் அவனைக் கண்டுபிடிக்க இயலவில்லை. செல்போன் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது. இதற்கிடையே கணவனே கண் கண்ட தெய்வமென நம்பி அவனுக்காக ஏற்கனவ தனது வேலையை அவள் ராஜினாமா செய்திருந்தாள். வேலைக்குச் செல்வதை நிறுத்தி மாதங்கள் பல உருண் டோடி விட்ட நிலையில் கைக்குழந்தையோடு மீண்டும் வேலைக்குச் செல்வது சத்தியமில்லை. வீட்டு வாடகை கொடுப்பதற்கும், குழந்தையைப் பராமரிப்பதற்கும் போதிய வருமானம் இல்லை. வாழ்க்கையை கழிக்க வேறு வழியே இல்லை என்னும் இக்கட்டான வேளையில் தன் குழந்தையோடு தன் தகப்பன் வீட்டுக்குச் சென்றாள். தற்போது அவளுக்குத் துணையாக வயது முதிர்ந்த அவளது தகப்பனாரும், தாயாரும் அவளோடு இணைந்து போலீஸ் நிலையம், நீதிமன்றம் என நீதி தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

பெற்றோரும், உடன்பிறந்தோரும் நிம்மதி இழந்து தவிக்கும் நிலை கேத்ரீனால் உருவாகியுள்ளது. இது போன்ற செய்திகளும், நிகழ்வுகளும் செய்தித்தாள்களிலும், ஊடகங்களிலும், தினந்தோறும் வந்து கொண்டிருக்கின்றன. இதுபோல் குறைந்தபட்சம் வாரத்திற்கு ஒருமுறையாவது ஏதோ ஒரு இடத்தில் நடந்து வருகிறது. இருப்பினும் இளம் பருவத்தினர் தங்களின் வாழ்க்கைத் துணையை தெரிந்தெடுப்பதில் அவசரம் காட்டும் போக்கு அதிகரித்த வண்ணம் உள்ளது. திருமணம் என்பது வாழ்வின் முடிவல்ல. அது ஆரம்பம். ஆரம்பத்தில் சிறு கோளாறு ஏற்பட்டாலும் முற்றிலும் கோணல்தான். காலமெல்லாம் கஷ்டம்தான். எல்லாப் பிரச்சனைகளுக்கும் இறுதித் தீர்வை எட்டுவதற்கு சாத்தியமுண்டு. ஆனால் திருமணம் சார்ந்த சல்கள் காலம் முழுவதும் தொற்றித் தொடரும். அதனால் ஏற்படும் காயங்களும், கீறல்களும் பெற்றோர், சொந்த பந்தம் என எல்லோர் மத்தியிலும் பரந்து பரவி நிம்மதியைக் கெடுக்கும். அதனால்த் தான் "நிலம் வாங்க விரைந்து செல்: வரன் பார்க்க மெதுவாக நட", நினைத்தது நிறைவேற ஒருமுறை வேண்டுதல் செய், ஆனால் மணப்பொருத்தம் வேண்டினால் பல தடவை கடவுளை மன்றாடு" என்பது போன்ற பழமொழிகள் திருமணக் காரியத்தில் நிதானம் தேவை. அவசரம் கூடாது என்பதை உணர்த்துவதற்காகவே காலம் காலமாக சொல்லப்பட்டு வருகின்றன. அவசரப் போக்கு ஆபத்தையே விளைவிக்கும்.

2011இல் நடந்த வன்குற்றங்களில் கொலை செய்யப்பட்ட 877 பேரில் 97 பேர் காதல் பிரச்சனையால் கொலை செய்யப்பட்ட பெண்கள் என்ற புள்ளி விபரம் மிகவும் திகைப்பூட்டுவதாக உள்ளது. அதே ஆண்டில் நடந்த தற்கொலைகளில் 32 சதவிகிதம் காதல் தோல்வியால் நடந்துள்ளது என்பதும் ஜீரணிக்க இயலாத ஒன்றாகவே உள்ளது. உணர்வுக்கு அடிமையாகி நிதானமிழப்பதால் இளையோர் இத்தகைய தவறுதலான முடிவை எடுத்து விடுகிறார்கள். இவர்களின் இதுபோன்ற செயல்பாடுகளினால் இருதரப்புப் பெற்றோரும், உறவினர்களும் தீராத துன்பத்திற்கும், தாங்க இயலாத அவமானத்திற்கும் ஆளாகின்றனர். இக்காரியத்தில் சிறிது தாமதித்திருந்தால்கூட உயிர்கொலைகளில் போயிருக்கும். மன உளைச்சல்கள் பல தவிர்க்கப்பட்டு எண்ணற்ற கல்யாண மன்னர்களும், கல்யாண ராணிகளும் உதயமாகி இருந்திருக்க மாட்டார்கள்.

கல்யாண மோசடி மன்னன் ஆரிப்கான் 150க்கும் மேற்பட்ட பெண்களுடன் திருமணம் குறித்த தகவல்களைப் பரிமாறி மோசடியில் ஈடுபட்டுள்ளான். இவனுடன் ஏற்பட்ட முதல் சந்திப்பிலேயே 50க்கும் மேற்பட்ட பெண்கள் தங்களையும், தங்களின் பணம்மற்றும் நகைகளையும் இழந்துள்ளனர். விலைமதிப்பற்ற தங்களின் வாழ்க்கையைக் குறித்து சிறிதும் வைராக்கியம் பாராட்டாததால் தங்களையே பாழ்படுத்திக் கொண்டுள்ள இவர்களை நினைத்து அழுவதா? அல்லது சிரிப்பதா? என்று தெரியவில்லை.

ஒருவர் தன் மனைவியை சொந்த ஊரில் விட்டு விட்டு வேலைக்காகக் குடியேறுவது போன்று குடியேறி ஓர் மாணவியுடன் குடும்பம் நடத்தியுள்ளார். அவர் கடுமையான தண்டனைக்குரியவர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் அவர் திருமணம் ஆனவர் என்பதை அறிந்த பின்னரும் அவரோடு நெருக்கம் பாராட்டி அவரது மாய வலையில் வீழ்ந்துள்ள மாணவியரும் பலர் இருக்கிறார்கள். அவர்களை என்ன செய்வது? அவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள் மட்டுமல்ல, கண்டனத்துக்கும், தண்டனைக்கும் உள்ளாக வேண்டியவர்கள்.

போத்திபாரின் மனைவி யோசேப்பை தம் தவறான கண்ணோட்டத்தோடு அணுகிய போது "இந்த மாபெரும் தீச்செயலைச் செய்து கடவுளுக்கெதிராகப் பாவம் செய்யலாமா?" என்று யோசேப்பு கேட்டார். பாவத்தை விட்டு விலகி ஓடினார். தவறு செய்வதற்கு அவர் இணங்கிருந்தாரெனில் அவர் எவ்வளவு அருவருப்பானவராகக் கருதப்பட்டிருப்பார். அவருக்கென்று ஆண்டவர் முன் குறித்திருந்த ஆசீர்வாதமும் அவருக்குக் கிடைத்திருக்காது. (தொநூ 39 -41) எதிர்கால ஆசீர்வாதங்கள் கிடைக்கும் வகையில் இளமையை ஆண்டவருக்கு அர்ப்பணிப்பதிலும், பரிசுத்தமாக வாழ்வதிலும் இளம் பருவத்தினர் முனைப்புக் காட்ட வேண்டும். திருமணத்தின்போது இருதரப்புப் பெற்றோரின் ஆசீர்வாதங்களும், வாழ்த்துக்களும் இன்றியமையாதவை என்பதை திருமணத்தை எதிர்நோக்கியிருப்போர் மனதில் இருத்த வேண்டும் பெற்றோர் - பெரியோர்புடைசூழ திருமணத்தைப் பதிவு செய்தல், திருமணப் பதிவிற்குப் பின்னரே வாழ்க்கையை ஆரம்பித்தல் என்பதில் ஆர்வம் காட்டினால் குற்றங்கள் குறைவதற்கு வாய்ப்புள்ளது.

திருமணப் பதிவுச் சட்டத்தின்படி எந்த மதத்தைச் சார்ந்தவராக இருப்பினும் திருமணம் ஆன 90 நாட்களுக்குள் திருமணத்தைப் பதிவு செய்ய வேண்டியது கட்டாயம். கணவன் - மனைவியின் ஊர், தம்பதியர் வாழும் இடம், திருமணம் நடைபெறும் இடம், இவற்றின் அருகில் இருக்கும் பதிவாளர் அலுவலகத்தில் திருமணத்தைப் பதிவு செய்ய வேண்டும். ஆலயத்தில் குருவானவரால் நடத்தி வைக்கப்படும் திருமணங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அரசாங்கத்தால் நடத்தி வைக்கபடும் திருமணங்களும் இதற்கு விதியிலக்கல்ல. பதிவினைத் தொடர்ந்து அரசாங்கத்தால் முத்திரையிடப்பட்ட திருமணச் சான்றிதழ் கிடைக்கிறது. இச்சான்றிதழே பாஸ்போர்ட் உட்பட அனைத்துத் துறையினராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிற திருமணச் சான்றாவணம் ஆகும். திருமணமும் சட்டப்ூர்வமாக அங்ககரிக்கப்படுகிறது.

**எப்படியும் வாழலாம்**
**என்பது விலங்கினம்**
**இப்படித்தான் வாழ வேண்டும்**
**என்பதே மனிதம்!**

# மாதகலில் இருந்து செபமாலைதாசர் சபைக்கு புதிய குரு



யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் மாதகல் புனித தோமையார் ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரர் பேடினன்ட் ஜெநெற் அவர்கள் எதிர்வரும் தை மாதம் 10ம் திகதி 2013ம் ஆண்டு காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் பேராலயத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களினால் குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

இவர் தனது முதல் திருப்பலியை தை மாதம் 12ம் திகதி 2013 ஆண்டு காலை 9.30 மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

அருட்பணி பேடினன்ட் ஜெனெற் அவர்கள் மாதகலைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி இக்கினேசியஸ் கிறிஸ்ரி, மேரி பிரான்சிஸ்கா தம்பதிகளின் புதல்வனாக 10.08.1980 இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை புனித தோமையார் பெண்கள் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியினை புனித கென்றியரசர் கல்லூரியிலும், யா/ சாள்ஸ் மகாவித்தி யாலயத்திலும், மன்/ பண்டிவிரிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், உயர் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவு செய்தார்.

அருட்பணி. விமலதாஸ் அவர்களின் அழைத்தலில் ஊக்கம் பெற்று, அருள் ஆச்சிரமம் சிறிய குருமடத்தில் பாதம் பதித்தார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்தார். தொடர்ந்து கண்டி தேசிய குருமடத்தில் இறையியல் கல்வியும் நிறைவு செய்தார். இவர் கடந்த 16.07.2003.ல் தனது முதல் வாக்குத்தத்தத்தையும், 15.09.2007இல் தனது நித்திய வாக்குத்தத்தத்தையும் எடுத்தார்.

25.07.2012 அன்று செபமாலைத்தாசர் சபைத் திருத்தொடராக உயர்த்தப்பட்ட இவர் அருள் ஆச்சிரமத்தில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

## விண்ணக வாழ்வின் இன்பத்தில் 5 ஆண்டுகள்



அமரர்

**திரு. மரியாம்பிள்ளை யேசுதாசன்**

மண் மகிழ 22.07.1945 — விண் மகிழ 10.01.2008

"ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்து பாருங்கள்" (தி.பா. 34:8)

நித்திய வாழ்வின் நீண்ட இன்பத்தில்
உன்னதரின் பேரன்பில் உறைந்திருக்கும் உங்களை
நீங்கா... நினைவுகளோடு இந்நாளில்
நினைத்து செபிக்கின்றோம்.
நாமும் ஒரு நாள் சந்திப்போம் என்ற நம்பிக்கையில்

128, கொழும்புத்துறை வீதி,
பண்டியன்தாழ்வு
யாழ்ப்பாணம்.

Add - 06/13

செபங்களுடன்
குடும்பத்தினர்.

## முதலாம் வருட நினைவஞ்சலி



**திரு. யேக்கப் சூசைதாஸ்**

(ஓய்வு பெற்ற அதிபர்)

மண்ணில்: 06.03.1935

விண்ணில்: 28.01.2012

"சீவியத்தில் உங்களை நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்"

ஆண்டொன்று மறைந்தாலும் அப்பா
உங்கள் நினைவு மறையவில்லையே
எங்களுக்கு கல்வியறிவையும், தெய்வபக்தியையும் ஊட்டி
சீரோடும் சிறப்போடும் எம்மை வாழ வைத்தீர்களே அப்பா
உங்கள் அமைதியான பேச்சும் புன்சிரிப்பும்
எம் கண்முன்னே தெரிகின்றன.
நீங்கள் நோயுற்றவராய் இருந்தாலும் ஆண்டவர் மேல்
வைத்திருந்த நம்பிக்கையும், பக்தியும் வீண் போகவில்லையே
அப்பா, ஆண்டவர் உங்களுக்கு நல்ல மரணத்தை தந்து
தன்னிடம் அழைத்துக்கொண்டாரே
அப்பா எங்கள் ஆருயிரே இறைவன் அருகிலிருந்து
எமதில்லங்களுக்கு காவல் தெய்வமாக இருந்து
நாம் நலமுடன் வாழ இறைவனை வேண்டுவீர் தந்தையே

[நன்றித்திருப்பலி ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் 28.01.2013 திங்கட்கிழமை அன்று மாலை 05.30 மணிக்கு நடைபெறும்]

ஆறாத்துயரில் கலங்கிநிற்கும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர், உற்றார்,
உறவினர்.

Add - 07/13

## புனிதநாட்டிற்கான 08 நாள் திருப்பயணம்

விசுவாச ஆண்டினைசிறப்பிக்க யாழ். மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணையம் ஒழுங்குசெய்யும் புனித நாட்டிற்கான திருப்பயணம் வரலாற்று இயேசுவை ஆழமாக அறிந்துகொள்ள...

நம் மீட்பரான இயேசுக்கிறிஸ்து வரலாற்றில் மனிதனாகப் பிறந்துவாழ்ந்த இஸ்ராயேல் நாட்டிற்குதிருப்பயணம் செய்யவிரும்புவோருக்குயாழ். மறை மாவட்ட சமூகத்தொடர்பு ஆணையம் ஒழுங்குசெய்யும் அரியசந்தர்ப்பம்.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு மீண்டும் திரும்பும் வரை சகல பயண ஒழுங்குகளும் செய்யப்படும். இயேசுவின் வாழ்வோடுதொடர்புபட்டசகல இடங்களுக்கும் செல்லுதல். அனைத்து விளக்கங்களும் தமிழில் வழங்கப்படும்.

பங்குனி மாத திருப் பயணத்திற்கான பதிவுகளை மாசி மாதம் 15ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளமுடியும். இத்திருப்பயணம் பங்குனிமாதம் 04ம் திகதியாழ். பேராலயத்திலிருந்து ஆரம்பிக்கும்.

பயணத் தொகை : ஒருவருக்குரூபா 1,70,000 ரூபா மட்டுமே.
மேலதிகவிபரங்களுக்கு:
அருட்திருபோல் றொகான்
இயக்குனர்
யாழ். மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணையம்.

(உங்கள் பங்குக் குருக்கள் மூலமாகவும் அருட்திரு போல் றொகான் அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



**இருதயநாதர் மேரி டிலக்சனா**

(சங்கொட்டை)

மலர்வு 06.12.1995 — உதிர்வு 25.01.2012

பாசத்தின் இருப்பிடமாய்
குடும்பத்தின் குல விளக்காய்
நேசத்தின் இலக்கணமாய்
புன்னகைத்த எம் மேரி டிலக்சனா

துள்ளித் திரிந்த பள்ளிப்பாலகி – நீ
பண்புடன் ஒழுகி, பாபேரின் மனதை வென்று
சிட்டுக் குருவியாய் வட்டமிட்ட உனை
காத்திருந்த கழுகொன்று தீண்டு பறித்ததோ?

பெற்ற மனம் பேதலிக்குது
கூடிப் பிறந்த எம் இதயம் வெடிக்குது
கூடி வாழ வந்த உறவுகள் எம் கண்களில்
நீர் வழிகின்றது
நீ துள்ளி மகிழ்ந்து கொஞ்சி விளையாடிய – உம்
அக்கான் பிள்ளைகள் நாம் தேடுகின்றோம்
பள்ளி நண்பர்கள், ஆசிரியர்கள்
விடை காணா வினாவுடன் ஏங்குகின்றார்கள்
நீ நீங்கிய மன்னரின் பரிவாரத்தில்
என்றென்றும் மகிழ்ந்திரம்மா.

Add - 05/13

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்.

## பரிசுத்த கார்மேல் அன்னை ஆலய இளைஞர் ஒன்றியத்தின் 10வது வருட நிறைவையொட்டி நடாத்தப்படும் குறுக்கெழுத்துப்போட்டி தொடர்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 (X) | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 (X) | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 (X) | 15 |
| 16 | 17 | 18 (X) | 19 | 20 |

அனுப்புபவரின் பெயர் :

விலாசம் :

**இடமிருந்து வலம் :**

2. ________ இன்றைய தலைவன்
6. வேதம்
9. சிலுவையின் நிலை, இறைவனை புகழ்ந்து
11. நற்சமூகம் மலர ________ தவிர்க்கப்பட வேண்டும்.
19. மருத்துவ உதவியாளர்

**மேலிருந்து கீழ் :**

2. எல்லாம் அவன் செயல்
5. வலிமையானவன் குழம்பி உள்ளான்
6. ஆன்மீகம்
19. இரந்து கேட்பது.

### நிபந்தனை

- விடைகளை அனுப்ப மேலுள்ள கூப்பனை மட்டுமே பாவிக்கவும்.
- ஒரு நபர் ஒரு கூப்பனை மட்டுமே பாவிக்க அனுமதிக்கப்படுவர்.
- போட்டி தொடர் 4 இன் முடிவில் மூன்று வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குரிய பரிசில்கள் வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய இறுதித்திகதி 31.01.2013

**முகவரி**

குறுக்கெழுத்துப் போட்டி இல 01
பரிசுத்த கார்மேல் அன்னை ஆலய இளைஞர் ஒன்றியம்
பரிசுத்த கார்மேல் அன்னை ஆலயம்
பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் M.D. யேசுதாசன்
(இளைப்பாறிய பொறியியலாளர்)



பிறப்பு 14.12.1932 — இறப்பு 12.01.2012

"சீவியத்தில் இவரை அன்பு செய்தவர்களே
மரணத்திலும் இவரை மறவாதீர்"

டானியல் குடும்பத்தின் மூத்த குலவிளக்கு அமரர் டானியல் யேசுதாசனின் 1ம்ஆண்டு அமரத்துவ நிறைவைக் கண்ணுறும் உற்றார் உறவினர், நண்பர்கள், புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவரை இவரின் ஆன்ம சாந்திக்காக மன்றாடும்படி வேண்டுகின்றோம்.

நன்றி

திருமதி. பி. எவ். சின்னத்துரை
63, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.

Add - 04/13

மனைவி, மக்கள்
சகோதரர்.

## விண்ணக வாழ்வின் 7ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 13 06 1913



விண்ணில் 15 01 2006

அமரர்

**மடுத்தீன் அந்தோனிப்பர்னாந்து**

(பொன்னுத்தம்பி)

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"

இவ்வுலகும் நிலவலில் அகலாத
பாச ஒளியமே – ஐயா
இனியும் நிலவும்போம்
இறைவனின் அமைதி பெறுவீர்.

உம் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள் உறவினர்

5ம் வட்டாரம்
மண்டைதீவு.

Add - 03/13

226, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.

## சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவித்தல்

2013ம் ஆண்டுக்கான சந்தாபணத்தைச் செலுத்தி உங்கள் பாதுகாவலன் வரவை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். சந்தா செலுத்தாதவர்களுக்கு பாதுகாவலன் அனுப்பப்பட மாட்டாது என்பதை வருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

**வருட சந்தா – உள்ளூர் 750/=**
**(தபால் செலவு உட்பட)**
**வருட சந்தா – வெளியூர் 2500/=**
**(தபால் செலவு உட்பட)**

- பாதுகாவலன் விநியோகப்பகுதி

## 31ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 06.01.1939 — விண்ணில் 04.12.2012

அமரர்
பிரான்சிஸ் துரை ஆரோக்கியதாசன்
"சமாதானம்"
(பலாலி ஆசிரியர் கலாசாலை இளைப்பாறிய பிரதி அதிபர்)

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"

இல 60, கோவில் வீதி
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

Add - 01/13

உம் பிரிவால் துயருறும்
அருட்சகோதரி மேரி மெட்டலின் பிரான்சிஸ்
(நல்லாயன் சபை)
சகோதரிகள் மக்கள் ,மருமக்கள் ,பேரப்பிள்ளைகள்

## அடியேனின் நன்றிப் பூக்கள்

அன்புத் தாயே எம் வேண்டுதல்களை கனிவுடன் கேட்டருளினீரே. அம்மா தாயே எமது இன்னல்களில் கரம் கொடுத்து தூக்கிவிட்டீரே இவ்வேளையில் உம்மை நினைத்து நன்றி கூறுகின்றேன். நீர் செய்த இந்த உதவியை நினைத்து உம் புகழை இவ்வுலகிற்கு எடுத்துரைக்கின்றேன். உமது புகழ் உலகெங்கும் பரவி உமது பக்தர்கள் உம்மைத் தேடி வர இந்த நன்றி நவிலலை உமக்கு ஒரு சாட்சியமாக்குகிறேன்.

நன்றி அம்மா!
நன்றி தாயே!

Add - 02/13

ஓர் அடியான்
பரீஸ் பிரான்சிஸ்.

# ஒப்புரவு அருட்சாதனக் குரு அருள்தந்தை யோசப்தாஸ் ஜெபறட்ணம்

– அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் –

அருள் தந்தை யோசப்தாஸ் ஜெபறட்ணம் அடிகளார் அண்மையில் தன் குருத்துவ வாழ்வின் வெள்ளி விழாவைக் கொண்டாடினார். எனக்கும் இவருக்குமிடையேயான உறவு புனித மடுத்தினார் சிறிய குருமடத்தில் ஆரம்பமாகித் தொடரும் ஒன்று. முல்லைத்தீவில் நான் பங்குத் தந்தையாக இருந்தபோது அவர் புதுக்குடியிருப்புப் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். அக்காலத்தில் நமக்கிடையே உறவு மேலும் வலுவடைந்தது. இக்காலம் அதிக துன்பம் நிறைந்த காலமாக நமக்கு விளங்கியது. ஏனெனில் இந்திய அமைதி காக்கும் படையின் செயற்பாடுகளும் பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளும் நம் பணியைக் கடினமாக்கின எனலாம். இக்காலத்தில் ஒருவருக்கொருவர் ஆதரவாகச் செயற்பட்டோம். இவரது எந்த ஆலயத்திலாவது பெருநாள் இடம்பெற்றால் நானும் எனது உதவிப் பங்குத்தந்தை அருள்தந்தை தவராஜசிங்கமும் அங்கு பிரசன்னமாக இருப்போம். அவ்வாறே எனது பங்கில் பெருநாள் இடம்பெற்றால் அவரும் உதவிப் பங்குத்தந்தை யாவிஸ் அடிகளாரும் தவறாது வருகை தருவார். இவ்வாறு நம் பணிப்பகிர்வு சுமூகமாக அமைந்திருந்தன. இவருடைய ஆளுமைப் பண்புகள் சிலவற்றை இங்கு குறிப்பிடுவது ஏனைய குருக்களுக்கும் பொதுநிலையினருக்கும் உந்து சக்தியாக விளங்கும் என்று கருதி இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

**1. ஒப்புரவுக் குரு:** இவரது வாழ்வில் ஒப்புரவு அருள்சாதனம் மிக முக்கிய இடத்தைப் பிடித்து வந்துள்ளது. முல்லைத்தீவில் பங்குத்தந்தையாக நான் பணியாற்றிய காலத்திலேயே இவருக்கு இறைவன் அளித்துள்ள ஒப்புரவாக்கும் கொடையை ஆழமாக அறிய முடிந்தது. என் பாவங்களை இவரிடமே அறிக்கையிடுவதுண்டு. இவர் என்னைவிட வயதில் குறைந்தவராக இருந்த போதிலும் இவரிடம் ஒப்புரவாக்கும் அருள் நிறைய இருந்ததை அவதானித்தேன். இவர் ஒப்புரவு அருள்சாதன வேளையில் எனக்குக் கூறும் அறிவுரைகள் என் ஆன்மீகப் பயணத்தில் வளர்வதற்கு பசளைபோன்று அமைந்தன. இறைவன் எனக்கு இவர் வழியாகச் செய்தி கூறியதாகவே உணர்ந்தேன். நான் ஆன்மீக வாழ்வில் வளர்ச்சி காணும்போது அவற்றை அடையாளம் கண்டு சுட்டிக்காட்டித் தட்டிக்கொடுப்பார். ஆன்மீக வாழ்வில் உயரச் சென்றுவிட்டதாக மகிழ்ச்சியுற்றுக் கொண்டிருக்கும்போது, எதிர்பாராத விதமாக பாவத்தில் வீழ்ந்து மனம் சோரும் போது, ஆறுதலும் ஊக்கமும் அளிப்பார். தன் அறிவுரையில் தன் அனுபவங்களைப் பகிர்வதோடு, இறைவார்த்தையையும் இறைவழிபாட்டுக் காலத்தோடு ஒட்டிய கருத்துகளையும் இணைத்து வழங்கியமை எனக்குப் பேருதவியாக இருந்தது. இவர் தன் சொந்த வாழ்வில் ஒப்புரவு அருள்சாதனம் அளித்த நன்மைகளைப் பகிரும்போது கேட்க மகிழ்ச்சியாக இருக்கும். ஒப்புரவு அருள்சாதன வேளை நமக்கு பரஸ்பர ஆன்மீக அனுபவப் பகிர்வாக அமைந்து இன்றும் உதவி வருகின்றது.

**2. மேய்ப்புப் பணி உணர்வு:** இவர் தன் மக்களின் ஆன்மீக நலன்களில் அக்கறை கொண்டு செயற்படுவார். இடம்பெயர்ந்தோர் உள்ள இடங்களில் அவர்களைத் தேடிச்சென்று அவர்களின் ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தார். புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் உள்ள குழந்தை இயேசு கோயில் சிறிய குடிசைக் கோயிலாகவே நீண்ட காலம் இருந்தது. ஆனால் இவர் அதனைப் பெருப்பித்துக் கட்டினார். இதை உருவாக்கும்போது எழுந்த பல்வேறு எதிர்ப்புகளையும் புத்திசாதுரியத்தோடு கையாண்டு அக்கோயிலைக் கட்டி முடித்தார். இவருடைய பங்கில் ஏதாவது ஒரு புதுச் செயற்பாடு இடம்பெற்றுக்கொண்டேயிருக்கும்.

**3. உதவும் மனப்பாங்கு:** எவராவது உதவிகேட்டால் தயக்கமின்றி உதவ முன் வருவார். இதன்போது தன் அசௌகரியங்களைக் கருத்தில் எடுப்பதில்லை. ஏழைகள் மட்டில் இரக்கம் நிறைந்தவர். 1990 யுத்த காலத்தில் வன்னிக்கு உணவுப்பொருட்கள் எடுத்து வருவது என்பது சேறும் சகதியும் நிறைந்த பாதையோடு இராணுவக் கெடுபிடி ஒரு நரக அனுபவமாகவே அமைந்தது. இத்தனையையும் இவர் பொருட்படுத்தாது பல தடவை கொழும்பு சென்று உணவுப் பொருட்கள் தருவித்து இடம்பெயர்ந்த திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவின் வெவ்வேறு ஆலய மக்களுக்குப் பங்கீடு செய்தார். இக்காலத்தில் இவரது சேவை பலருக்குப் பசிபோக்கும் ஒன்றாக அமைந்தது.

**4. அமைதியும் பொறுமையும்:** இவர் நிறைந்த பொறுமை கொண்டவர். எந்த வேலையையும் அமைதியோடு ஆமைபோன்று செய்து முடிப்பார். பங்கில் எழும் எந்தப் பிரச்சினையையும் பொறுமையாகவும் அமைதியாகவும் கையாளும் நிர்வாக ஆற்றல் இவருக்கு உண்டு.

**5. நகைச்சுவை உணர்வு:** இவரில் நகைச்சுவையானது இயல்பாகவே தோன்றுவதைக் காணமுடியும். எந்தக் குழுவில் இருந்தாலும் இவரோடு இருப்பது சிரிப்பும் கலகலப்பும் நிறைந்ததாக நகைச்சுவை நிறைந்திருக்கும். இவரை அறியாதவர்கள் இவரைப் பெருமை பிடித்த சுவாமி என்று கூறுவர். இதற்குக் காரணம் இவர் புதியவர்களை முதல் முறை சந்திக்கும்போது புன்னகைக்காது வரவேற்பதே. பழகியவர்கள் தம் தவறான முற்கருத்தை மாற்றிக் கொள்வர்.

**6. இளைஞருடன் நல்லுறவு:** இவர் இளைஞர்களோடு நல்லுறவு பேணி வந்தார். வசதியற்ற மாணவர்களின் கல்விக்கு உதவுவது இவர் செய்த முக்கிய பணியாகும். இவரிடமிருந்து உருவான இளைஞர்கள் நல்ல பணிகளில் இன்றும் இயங்கிக்கொண்டிருக்கின்றனர். இவர் விளையாட்டுத் துறையில் ஈடுபாடுகொண்டிருந்தமை இளைஞர்களின் உருவாக்கத்திற்குப் பல வழிகளில் சாதகமாக அமைந்தது. அந்த வகையில் இவர் டொன் பொஸ்கோ இளைஞரோடு கொண்டிருந்த அணுகுமுறை கொண்டவராக விளங்கினார். இவர் ஒளிவிழாவின்போது தன் தனிப்பட்ட பரிசளிப்பு நடாத்துவார். அதிலே பலருடைய கருத்தின் அடிப்படையில், அந்த ஆண்டுக்கான சிறந்த இளைஞன், சிறந்த யுவதி என இருவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசளித்துக் கௌரவிப்பார். இது ஏனைய இளைஞர்கள் யுவதிகளுக்கும் ஒரு ஊக்கம் அளிக்கும் சக்தியாக விளங்கியது.

**7. பண்பாடு, கலையுணர்வு:** இவர் கட்டிடத்திற்காகப் படம் வரையும்போது அதில் கலைத் தன்மையும் பண்பாட்டு மயமாக்கலும் மிளிரும். இவரது இத்திறனை உடுவில் புனித செபமாலை மாதா கோயில், நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயம், எளன்புரம் புனித யோசப் ஆலயம் மற்றும் புனித சவேரியார் குருமடத்திலுள்ள நூலகத் தொகுதி என்பவற்றில் தெளிவாகக் காண முடியும். மேலும் வழிபாட்டின்போது அர்த்தத்தோடும் கலையுணர்வோடும் அலங்கரிப்பு இடம்பெறுமாறு பார்த்துக்கொள்வார்.

**8. சதுரங்க வீரர்:** சதுரங்கம் என்பது நுண்ணறிவு நிறைந்தவர்களின் விளையாட்டு என்பது பொதுவான கருத்து. இதனை எனக்குக் கற்றுக் கொடுத்தவர் அருள்தந்தை அவர்களே. இவ்விளையாட்டின்போது இவரின் ஆளுமைப் பண்புகளைப் புரிந்துகொள்வேன். ஒவ்வொரு காய் நகர்த்தலையும் தீர ஆலோசித்த பின்னரே மேற்கொள்வார். அத்தோடு துணிச்சலோடு காய் நகர்த்தும் போக்கும் உடையவர். அதாவது தாக்கி வெல்லும் (offensive) போக்குடையவர். இன்னும் விளக்குவதாயின் தன் காய்களைப் பாதுகாத்துகொண்டேயிருப்பவரல்ல (defensive). நாம் இருவரும் சமபல வீரர்களாகவே நின்று போட்டியிடும் ஆட்டமாக அது பெரும்பாலும் அமைவதுண்டு. எவர் தோற்றாலும் அதன் பின்னர் நகைச்சுவை நிறைந்த நிகழ்வுகள் இடம்பெறும். இரசித்து மகிழ்வோம். அத்தோடு இவர் சிறந்த கிரிக்கட் வீரர். இவர் இவ்விளையாட்டின் வர்ணனையாளராக இருக்கும் போது அதுவும் நகைச்சுவை நிறைந்ததாகவே இருக்கும். இவற்றை விட இவர் ஒரு ரெல்வ் விளையாட்டு வீரரும்கூட.

**9. குழுவிளையாட்டு நடத்துநர்:** கருத்தரங்குகள் அல்லது ஒன்று கூடல்கள் இடம்பெறும் போது, குழு விளையாட்டுகளை நடத்துவதில் இவர் கைதேர்ந்தவர். அதில் நகைச்சுவை கலந்து ஆட்டத்தை சுவாரஸ்யமானதாக ஆக்கி விடுவார். நடாத்தும் கருத்தரங்கில் என் பகுதி உரையாக இருந்தால் இவரது பங்களிப்பு குழு விளையாட்டை நடாத்தி இளைஞர்களைப் புத்துயிர் பெறச் செய்வதாகவே அமையும்.

இறைவனின் தோட்டத்தில் தொடர்ந்தும் இவரது நற்குணங்கள், ஆன்மீகப் பண்புகள், பங்களிப்புகள் என்பன திசைகாட்டும் விளக்குகளாகத் திகழ பிலிநாயகனை உளமார வாழ்த்துகின்றேன்.

## ஒற்றை இலக்கு

– சேவியர் அந்தோனி –

இராணுவப் பயிற்சி முகாம்

அடர்ந்த காட்டில் துப்பாக்கி சுடும் பயிற்சி.
ஆற்றில் முட்டைகளை மிதக்கவிட்டுச்
சுட்டுக்கொண்டிருந்தனர்:

அனைவரும் வெற்றிகரமாகக் குறி தவறியே
சுட்டுக்கொண்டிருந்தனர். தலைமை அதிகாரி வந்தார்.
அவரும் அப்படியே செய்தார்.

அந்தப் பக்கமாக வந்தார் நரிக்குறவர் ஒருவர்.
நடந்த கூட்டதைப் பார்த்துச் சிரித்து விட்டார்.

வீரர் ஒருவர் கேட்டார்:

"ஏன் சிரிக்கிறாய்?
எங்களைப் பார்த்தால் இளக்காரமாய் தெரிகிறதா?
உன்னால் சரியாகச் சுட முடியுமா...?
சவால் விட்டார்.

"முயற்சி செய்கிறேன்,
ஒதுங்கி நின்று வேடிக்கை பாருங்கள்...!"

தனது துப்பாக்கியை எடுத்தார். மின்னல் வேகத்தில்...
மிதந்து வந்த எல்லா முட்டைகளையும்
குறி தவறாமல் சுட்டுத் தள்ளினார்.

முகாம் வீரர்கள் அவரிடம் ஆச்சிரியத்துடன்
கேட்டனர்:

"உன்னால் முடிந்தது.
எங்களால் முடியவில்லையே... ஏன்?"

குறவர் சொன்னார்:

"குறி வைக்கும் போது, ஒரே ஓர் இலக்கு மட்டும் தான்
கண்ணுக்குத் தெரிய வேண்டும். ஆனால்...
உங்களுக்கோ முட்டை என்ற இலக்குகோடு பயிற்சியில்
வெற்றி, பதவியில் உயர்வு என்ற
இரு வேறு இலக்குகளும் இருந்தன."

தொடர்ந்தார்:

"இந்த மூன்று இலக்குகளில்...
நீங்கள் எதைக் குறி வைத்துச் சுடுவீர்கள் பாவம்...!
எனக்கு முட்டையைத் தவிர
வேறு எந்த இலக்கும் தெரியவில்லை.
அதுவே எனது வெற்றியின் இரகசியம்..."

ஒரே நேரத்தில்
ஒன்பது குருவிகளை குறி வைப்பவன்
ஒரு குருவியையும் சுடமாட்டான்...!

## படித்து விட்டீர்களா? (3ம் பக்கத் தொடர்ச்சி)

கணிதப் பாடத்தையே மனப்பாடம் செய்ய முயல்பவர்கள் இருக்கிறார்கள். இந்தப் பாடம் முழுக்க முழுக்கச் செய்து பார்த்துக் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம். ஒவ்வொரு கணிதக் கேள்வியும் ஒரு பயிற்சி. அந்தப் பயிற்சியில் புதிதாக என்னென்ன வழிகளைக் (routes) கற்றுக்கொள்கிறோம் என்று பார்க்க வேண்டும்.

அறிவியலில் செய்து பார்த்துக் கொள்ள வேண்டியவை ஏராளம். ஒவ்வொரு பாடத்திலும் பல பரிசோதனைகள் இருக்கும். மாணவர்கள் எல்லாச் சோதனைகளையும் செய்ய வாய்ப்பிருக்காது. ஆசிரியர்கள் முடிந்தவரை சோதனைகளைச் செய்து காட்டலாம். பள்ளிக்கூட அறிவியல் சோதனைக் கருவிகள், எளிய மாதிரி வடிவங்கள் எல்லாம் இப்போது கிடைக்கின்றன. ஆசிரியர்களின் ஈடுபாடும், நிர்வாகத்தின் ஊக்குவிப்பும் நல்ல மாணவர்களை உருவாக்கப் பெரிதும் உதவும்.

அறிவியல் கண்காட்சிகள் நடத்தலாம். கண்காட்சிகளுக்கு அழைத்துப் போகலாம். மாணவர்களையே சில அறிவியல் கருவிகளின் மாதிரி வடிவங்களை உருவாக்கச் சொல்லலாம்.

மாணவர்களையே சில ஆய்வுத் திட்டங்களைச் செயல்படுத்த வைக்கலாம்.

சுற்றுச்சூழல், நீரின் தன்மையை மதிப்பிடல் போன்ற சில எளிய பயிற்சிகள் கூட மாணவர்கள் அறிவியல் முறையைப் புரிந்து கொள்ளப் பெரிதும் பயன்படும்.

உயிரியல் பாடங்கள் இயற்கையோடு மிக நெருக்கமான உறவுடையவை. பயிர்கள்,செடி, கொடிகள், பறவைகள், விலங்குகளின் அமைப்பு, இயக்கம், உணவுமுறை, இனப்பெருக்கம் எல்லாவற்றையும் நாம் பார்த்துத் தெரிந்துகொள்ள முடியும்.

சமூகவியல் பாடங்களுக்குச் செய்முறை இல்லையா!? வரைபடங்களில் பயிற்சி செய்யலாம். நாடுகள், தலைநகரங்கள், தட்பவெப்பம், உற்பத்தி முறைகள் இப்படி எத்தனையோ செய்திகளை நாம் பயிற்சி மூலம் கற்றுக் கொள்ள முடியும்.

நிறைவாக ஒன்று... வாசித்தல் முதல் செய்து பார்த்தல் வரை எல்லா முயற்சிகளையுமே ஒரு முறை செய்துவிட்டால் போதுமா? நிச்சயம் போதாது. தற்காலிகமாக அவை நினைவில் பதியும். மீண்டும் மீண்டும் நாம் இதே பணிகளைச் செய்யும் போதுதான் நாம் வாசித்தவை ஆழமாகப் பதிகிறது.

## 2013ல் விசுவாசத்தில்... (3ம் பக்கத் தொடர்ச்சி)

மனித வாழ்வின் ஏக்கங்களாகவும், உடனடித் தீர்வு எட்ட வேண்டிய நிலைகளாகவும் உள்ளன.

"மலையே வந்தாலும் தலையே சும என்ற நிலையில் தமது சுமைகளை தாமே சுமக்க முனைந்தாலும் அவற்றின் விளைவுகள் தொடருந்துகள் போன்று ஒன்றின்பின் ஒன்றாக வருமிடத்து யாருக்குத்தான் அவற்றைத் தாங்கிக் கொள்ளும் மனநிழைலகள் ஏற்படும்? எனவே எம்மத்தியிலே அடிமைத்தனங்கள், அகலவும், அநாகரீகச் செயற்பாடுகள் ஒழிந்து ஆன்மீக விசுவாசம் நிலைத்தோங்கவும், விடுதலை பெற ஏங்கும் உள்ளங்களுக்கு உண்மை, நீதியுடனான விடுதலை வாழ்வு கிடைக்கவும், அரசியல், பொருளாதார சமூக நெருக்கடிகளுக்கும், கொலை, கொள்ளை, பழிவாங்கல் போன்ற துன்பியல் வாழ்வுகளுக்கு உள்ளாகித் தவிக்கும் மக்களின் வாழ்வில் அமைதி நிறைந்த சுபீட்சமான வாழ்வு மலரவும் அனைவரும் ஒன்றிணைந்து இறைவனை நோக்கி எம் குரல்களை உயர்த்துவோம், அவரையே நோக்கி எம் கரங்களை நீட்டுவோம். எமது ஆழமான விசுவாசம் மிக்க செயல்களை பிறரன்புச் செயல்களாலும், அமைதி, மன்னிப்பு, நீதி, உரிமைக்காகப் போராடும் போன்ற செயல்களாலும் வெளிப்படுத்த ஒன்றிணைவோம்.

எம்மைச் சூழ்ந்துள்ள மக்கள் மத்தியிலேயே இறைவிசுவாசத்தை உறுதியோடு பரப்பவும், ஆழமாகவும் எம் கால்களை உறுதியோடு எடுத்து வைப்போம். நான் உண்டு எனது வேலை உண்டு என்ற குறுகிய மனப்பாங்கைக் களைந்தெறிந்து, பரந்த மனப்பாங்குடன் தேவையில் உழல்வோருக்கு எம் உதவிக் கரங்களை நீட்டவும், ஆன்மீகத்தை அழித்து அநாகரீகப் பாதையில் நடைபயில்வோரின் பாதையை ஆண்டவன் திருமுக ஒளி நோக்கித்திருப்பி ஒரே இறைவனில் முழுமையான விசுவாசம் கொள்ளவும், அவர் ஒருவராலேயே நாம் தேடும் சுதந்திரம், அமைதி, நீதி, விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை வலுப்படுத்தவும் முனைவோம்.

ஆக்கம் : S.M. வுனோறன்ஸ்
(இளவாலை)

# நம்பிக்கை வாழ்வு பற்றிய தெளிவு வேண்டும்!

## அலசலும் உரசலும்

(சமகால சமூக ஆன்மீக தொடர்) 14

அருள் முனைவர் ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.

**அறிமுகம்**

இது நம்பிக்கை ஆண்டு! எம் நம்பிக்கை வாழ்வை பற்றி தெளிவு பெற வேண்டிய காலத்தின் கட்டாயம். நம்பிக்கை ஆண்டிலே மறை மாவட்ட மட்டத்திலும் பங்கு மட்டத்திலும் பல்வேறு செயற்பாடுகளுக்கான திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கலாம். பெரும்பாலும் இத்திட்டங்கள் வெளியரங்கத்தில் நம்பிக்கை வாழ்வை பறைசாற்றுவதாக அமையலாம். ஆனால் உள்ளார்ந்த ரீதியாக எதுவித மாற்றமில்லாமல் மறைக்கல்வி ஆண்டைப்போல் செயற்திட்ட அறிக்கையோடு கலந்து விடலாம். எமது வாழ்வின் இருப்பாக நம்பிக்கை என்று சொன்னால் மிகையாகாது. நம்பிக்கை என்றால் என்பது பற்றி தெளிவில்லாத வரைக்கும் எமது வாழ்க்கையில் எதுவித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. இன்று இறை நம்பிக்கை அருகிப்போய்க் கொண்டிருப்பதற்கு உள்ளரங்க, வெளியரங்க காரணிகள் உண்டு என்பதை மறுக்க முடியாது. குறிப்பாக உள்ளரங்கத்தில் நம்பிக்கை வாழ்வு வெறும் கோட்பாடாக, பக்தியாக, இன்னும் சடங்காக புரிந்து கொள்ளப்படுவதினால் மனித இதயங்களில் இறை நம்பிக்கை ஆழமாக வேரூன்றவில்லை என்று கூறலாம். இன்று மதங்கள் உண்டு: ஆனால் ஆன்மீகம் தான் மனிதர்களிடையே இல்லை. எமது தேசத்தில் நான்கு மூத்த மதங்கள் உண்டு: ஆனால் அவை வெறும் மதங்களாக வாழ்வை தொடாதவையாக இருப்பதினால் அமைதியை சமாதானத்தை அனுபவிக்க முடியாதுள்ளது. நம்பிக்கை பற்றிய பார்வை மாறும்போது தான் நம்பிக்கை வாழ்வு உயிரோட்டமுள்ளதாக, வேரோட்டமுள்ளதாக மாறும்.

**நம்பிக்கை வாழ்வு பற்றி பார்வையில் மாற்றம் தேவை :**

இன்று நாம் வாழும் சூழல் நம்பிக்கையை வளப்படுத்துவதாக இல்லை. வன்முறைகளும் வன்புணர்வுகளும் பெருகி ஒரு வன்முறைக் கலாச்சாரம் உருவாகியிருப்பதை காணலாம். சுயநலமும், அதிகார அரசியலும் அநீதிகளை வளர்ப்பதை காணுகின்றோம். சந்திக்கு சந்தி கோயில்களும், மத அடையாளங்களும் பெருகிய அளவு ஆன்மீகமும், இறை நம்பிக்கையும் அதிகரித்ததாக தெரியவில்லை. அத்துடன் மதங்களும் வெளியரங்க அடையாளங்களுக்கும், வழிபாடுகளுக்கும் சடங்குகளுக்கும் முன்னுரிமை அளித்து வளர்த்து வருவதால் இறைநம்பிக்பை அருகி வருகின்றது. இறைநம்பிக்கையை பக்திமயப்படுத்தி வெளியரங்க கொண்டாட்டங்களையும், திருவிழாக்களையும் மையப்படுத்தியதாகவே நம்பிக்கை வாழ்வை பார்க்கின்றோம். இன்னும் எத்தனையோ கிறிஸ்தவர்கள் இத்தகைய ஆழமற்ற மேலோட்ட பார்வையையே கொண்டுள்ளனர். அடிப்படையில் எமது நம்பிக்கை (விசுவாசம்) வாழ்வை இத்தகைய மேலோட்□டமான பார்வையிலிருந்து விடுவிக்க வேண்டும். ஆன்மீகத்தை வளர்க்காத மதக்கோட்பாடுகளையும் சடங்குகளையும் இறுக்கமாக பின்பற்றுவதால் கிறிஸ்தவம் தன் நம்பகத்தன்மையை இழந்து கொண்டு வருகின்றது. மதக்கோட்பாடுகளின் மட்டில் உள்ள அறிவு மட்டும் இறை நம்பிக்கையை வளர்க்கப் போவதில்லை (உ-ம் : விசுவாசப்பிரமாணத்திலுள்ள போஞ்சியு பிலாத்து - இவரை ஏன்? விசுவாச பிரமாணத்தில் சேர்த்தார்கள். எனவே விசுவாசப் பிரமாணத்தை வார்த்தைகளால் அறிக்கையிடுவதாலோ கடவுள் பற்றிய அறிவை வளர்ப்பதாலோ மட்டும் இறை நம்பிக்கை வ்ளம் பெறப்போவதில்லை என்ற உண்மையை புரிந்து கொள்ள வேண்டும்.

**நமபிகைக என்றால் என்ன?**

நம்பிக்கை என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ள அதன் இரு முகங்களை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். முதலில் நம்பிக்கையை இறை - மனித உறவாக அடிப்படையில் நோக்கப்படவேண்டும். அடுத்ததாக நம்பிக்கையின் உள்ளீடு (Content) பற்றியதாகும். ஒவ்வொரு கிறிஸ்தவனின் இதயத்திற்குள் உறைந்திருக்கும் இறைவனோடு ஏற்படுத்தும் உறவே உண்மையில் நம்பிக்கையாகும். நம்பிக்கையின் உள் ளீடாக இருப்பவைதான் விசுவாச கோட்பாடுகளும், மறைக்கல்வியும், அருட்சாதனங்களாகும். வெறுமனே விசுவாசக் கோட்பாடுகளை அறிக்கையிடுவதாலும், மறைக்கல்வியை கற்பதாலும் நம்பிக்கை வளர்ந்துவிடாது. இதை எமது கிறிஸ்தவ வாழ்க்கையில் பார்க்கின்றோம். ஆனால் இறைவனோடு தனிப்பட்ட முறையில் உறவை கட்டியெழுப்புவதே இறை நம்பிக்கை வாழ்வாகும். இது ஒரு நீடிய உறவுப்பயணமாகும். என்னோடும், இறைவனோடும், அடுத்தவரோடும் இணைந்து வாழும் உறவுப் பயணம்தான் நம்பிக்கை வாழ்வு என்பதில் தெளிவு பெறாத வரைக்கும் ஆன்மீக வாழ்வில் வளர்ச்சி காண முடியாது. ஒரு முக்கோண உறவாகவே நம்பிக்கை (விசுவாசம்)வாழ்வு நோக்கப்பட வேண்டும். இறைவனைப்பற்றிய தேடலும், தாகமுமமே இறையுறவை, இறைப்பற்றை வளர்க்க உதவுவதாகும். கிறிஸ்துவோடு கொள்ளும் நெருங்கிய உறவுப் பரிமாற்ற மாக அனுபவமாக மாறும் போதே நம்பிக்கை ஆழம் பெறுகின்றது. இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கக் கூடிய வறுமை ஆன்மீகத்தை (Pouerty of spirituality) சார்ந்ததாகும். அமைப்பு ரீதியான திருச்சபையும் பங்கும் புதுப்பிக்கப்பட வேண்டும். ஆன்மீகத்தை ஆழப்படுத்த உறவின் அடித்தளத்தில் நோக்கப்படும் நம்பிக்கை வாழ்வை கட்டியெழுப்பவேண்டும். சீடத்துவம் என்பது கிறிஸ்துவோடு வாழும் உண்மைத்தனமான நெருங்கிய உறவிலேயே தங்கியுள்ளது. எனவே இன்றைய நம்பிக்கை வாழ்வை நோக்கும் போது உண்மையான, நம்பகத்தன்மையை வெளிப்படுத்தும் நம்பிக்கை வாழ்விலிருந்து தொலைவில் வாழ்கின்றோம் என்ற கசப்பான உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**நம்பிக்கை வாழ்வு ஒரு தொடர் மனமாற்றமாகும்**

நம்பிக்கை வாழ்வை உறவுப் பயணமாக நோக்குமிடத்து இறைவனுடன் தொடரும் தொடர்பாடல், உறவின் வழியாக நிகழும் மனமாற்றத்திற்கு இட்டுச் செல்வதாக அமையவேண்டும். இறைவனோடு உறவு இருக்கும்போது என்னோடும், அடுத்தவரோடும் உறவை கட்டியெழுப்புவது தவிர்க்க முடியாததாக மாறிவிடும். நான் என்ஆள்தன்மையிலிருந்து, சுயத்திலிருந்து இறைவனை நோக்கி, என்னை நோக்கி அடுத்தவரை நோக்கி பயணம் செய்யும் உறவினால் நம்பிக்கை வாழ்வில் வளர்ந்து முதிர்ச்சியடைய முடியும். உ-ம் : அன்பிய வாழ்வை அர்த்தமுள்ளதாக்கி, ஆழப்படுத்துதல் இத்தகைய வாழ்க்கை முறைக்கு உதவுவதாக அமையும். எனவே பங்குகளில் வெளியரங்கக் கொண்டாட்டங்களுக்கும், சடங்குகளுக்கும், பக்தி முயற்சிகளுக்கும் ஊக்கம் கொடுப்பதை விடுத்து உறவின் அடித்தளத்தில் நம்பிக்கை வாழ்வை கட்டியெழுப்பும் வாழ்க்கை முறைக்கு முதன்மை அளித்தல் பங்குத்தந்தையரின் கீடப்பாடாகும். ஆலயங்களும், மத அடையாளங்களும் தேவையானதுதான். ஆனால் அவை மட்டும் உண்மையான ஆன்மீகத்திற்கும், நம்பிக்கை வாழ்வின் புதுப்பித்தலுக்கும் இட்டுச் செல்லப்போவதில்லை என்பது கடந்தகால அனுபவம் என்பதை மறுப்பதற்கில்லை. எமது நம்பிக்கை வாழ்வுப் பயணம் தேங்கிக் கிடக்கும் சாக்கடை போல் உயிரோட்டமில்லாமல் இருப்பதற்கு அடிப்படை காரணம் சடங்குகளுக்கும், வெளியரங்க செயற்பாடுகளுக்கும் அடிமையாகி போன வாழ்க்கை முறையாகும். நம்பிக்கை என்பது இறைவனோடுள்ள உறவு, என்னோடுள்ள உறவு, அடுத்தவரோடுள்ள உறவு என்ற முப்பரிமாணத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இத்தகைய நம்பிக்கை வாழ்வு பற்றிய புரிதல் இல்லையெனில் இந்த நம்பிக்கை ஆண்டும் வெளியரங்க சில செயற்பாடுகளோடு எவ்வித உள்ளரங்க மாற்றமில்லாத, புதுப்பிக்கப்படாத வாழ்க்கையாக வளப்படும். கடவுள் மட்டில் என் நம்பிக்கை உறுதியாக நம்பகத்தன்மையுள்ளதாக இல்லாத வரை அடுத்தவரை நம்பிக்கையானவராக நோக்க முடியாது. இறைநம்பிக்கையின் நம்பகத்தன்மை, தெய்வீகத்தன்மை எல்லைகளை கடந்து இன,மத, மொழி பேதம் கடந்து அனைவரையும் ஏற்று அன்பு செய்யும் ஆன்மீகத்தின் முதிர்ச்சிக்கு இட்டுச் செல்லும். இதுவே இன்றைய தேவையாகும்.

(உரசல் தொடரும்...)

## கவிதைச் சரம்

### கருவின் கலக்கம்

இரவில் விதைக்கப்பட்ட  
நான் வெளிவர  
விடியலுக்காகக்  
காத்திருந்தேன்.  
விடியவுமில்லை,  
வெளிச்சமுமில்லை.  
காத்திருந்து காத்திருந்து.  
கருகிப் போனேன்.  
வேதனையில் வீழ்ந்த  
வித்து நான்.

### உன்னில்

காற்றை, கடலை,  
கனலை... கேட்டேன்.  
கடவுளைக் கண்டாயா?  
என்று, கண்டோம் -  
உன்னில் என்று என்னை  
மெய்சிலிர்க்கச் செய்தன.

### செபமாலை

நாக்கு சுழன்று கொண்டிருக்கிறது  
மனம் சுற்றிக் கொண்டிருந்தது.  
கைககளில் உருண்ட மணிகள்  
தானாய் பின்னோக்கி நகர...  
தொடங்கிய இடத்திற்கே வந்து  
அந்தப் பெரிய மணி கையில்  
அகப்பட்டபோதுதான் உணர்ந்தேன்  
அட செபமாலை முடிந்துவிட்டது.



### தயக்கம்

தெய்வம் வீட்டுத்  
தேய்காய்த் தண்ணீர்போல்  
தேங்கி கிடக்கும் கடலை  
தேவதையுடன்  
சேர்ந்து பார்த்துக்  
கொண்டேயிருக்கையில்  
எங்களைக் கடக்கலாமா  
வேண்டாமாவென  
தயங்கியபடி கரையில்  
நிற்கிறது காலம்.

சகோ. காணி

### திருந்தந்தை நெஞ்சிருக்கும் அருட்தந்தை கமிலஸ் நிமலன் அடிகள்

காவலூர் பெற்றெடுத்த கற்பகம்  
கருத்துக்கள் தேனூறும் பெட்டகம்  
ஆவல்மிகு பணி வீசும் தென்றல்  
ஆண்டவர்க்காய் வாழும் தவவலிமை  
தேவனின் திருநாமப் புகழுரை  
திருத்தந்தை நெஞ்சின் நிறைகுடம்  
நாவலிமை போற்றும் நல்லாயன்  
நலன் பெறு பட்டங்கள் பலபெற்று  
ஏவாமக்களின் மூவா மருந்தாக  
எங்கும் எதிலும் தழைத்து வாழ்க

குருத்துவத்தின் மகிமை நிறை நாதம்  
கன்னித்தமிழர் நெஞ்சமரும் கீதம்  
அருட்கொடையின் தேவதரிசன சப்தம்  
ஆளுமை நிறைவாற்றலின் சித்தம்  
கருப்பொருள் மறையுரையின் நாற்று  
கருணைநதி பொங்கி எழும் ஊற்று  
திருமறையில் உயர்ந்து நிற்கும் கோபுரம்  
தளம்பாத கொள்கைகளின் வேத வாக்கு  
தருகின்ற அன்புத்தந்தை கமிலஸ் நிமலன்  
தரணியில் இறைபலம் பெற்று நீடுவாழ்க

ச. பாலன் சேவியர், அல்லைப்பிட்டி.

# உலக இறையழைத்தல் செபதினத்தை முன்னிட்டு

## சுவரொட்டிப் போட்டி (21 சித்திரை 2013)

மேற்படி தினத்தை முன்னிட்டு மாணவர்கள் உங்களுக்கிடையிலான "சுவரொட்டிப்" போட்டி தேசிய ரீதியில் நடத்தப்படவுள்ளது. பங்குபற்றி பரிசு பெறுங்கள்.

### போட்டிக்கான விதிகள் :

**மையப்பொருள் :** தமது அறுவடைக்குத் தேவையான வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள் (லூக்கா 10:2)

**வயது எல்லை :** 1ம் குழு - தரம் 6-9
2ம் குழு - தரம் 10-13

**அளவு :** 18"x14" (ஆட் பேப்பர்)

**தயாரிப்பு கருவி :** பேனா, சோக், நீர், வர்ணம், மை

**முடிவுத்திகதி :** 20 மாசி மாதம் 2013

**குறிப்பு :**

- மாணவர்களின் சுய ஆக்கமாக இருக்க வேண்டும்.
- ஒரு மாணவர் ஓர் ஆக்கம் மட்டுமே கையளிக்கலாம்.
- தாளின் பிற்பகுதியில் பெயர், கல்வித்தரம், பாடசாலைப்பெயர், பங்கு என்பவற்றை குறிப்பிடவும்.
- ஆக்கம் அனைத்தும் மாணவரின் பாடசாலை அதிபர் அல்லது பங்குத்தந்தையால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.
- தரமான பொருள் செறிந்த ஆக்கத்திற்கு பரிசில் சான்றிதழ் வழங்கப்படும்.

**அனுப்ப வேண்டிய முகவரி**
**அருட்பணி. எமில் போல்**
**இயக்குனர், இறையழைத்தல் பணிக்குழு,**
**த.பெ.இல 02**
**ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

## அருட்பணி சகாயநாயகம் அடிகளாரின் தந்தை காலமானார்

யாழ் மறைமாவட்ட குருவும் யாழ் மரியன்னை பேராலய பங்குத் தந்தையுமான அருட்பணி. R.H. சகாயநாயகம் அடிகளாரின் அருமை தந்தையார் திரு. தோமஸ் போல் இராஜநாயகம் அவர்கள் தமது 102வது வயதில் கடந்த 26.12.2012ல் கனடாவில் காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் கனடாவில் கடந்த 05.01.2013ல் நடைபெற்றன. அமரர் தோமஸ் போல் இராஜநாயகம் அவர்கள் மறைந்த அமரர் அருட்பணி மதுரநாயகம் அடிகாளாரின் அருமை சகோதரர் ஆவார்.

நீண்ட வாழ்நாளை கொடுத்த இறைவனுக்கு நன்றி கூறுவதுடன் இவரின் பிரிவால் துயருறும் அருட்தந்தைக்கும் அவரது உறவுகளுக்கும் பாதுகாவலன் தமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றது.



**கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தின் ஒளிவிழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமல மரித்தியாகிகளின் மாகாண முதல்வர் அருட்பணி. போல் நட்சத்திரம் அடிகளார் மங்கள விளக்கேற்றுவதையும், பங்குத்தந்தை அருட்பணி. பெஞ்சலஸ் லொஜ் அடிகளார் அருகில் நிற்பதையும் ஆலய பங்கு மாணவிகளின் நடன நிகழ்வையும், பிரதம விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.**

# வன்னி வந்த ஆயர் பேரவையிடம் கவலை தோய்ந்த இதயங்களுடன் கிளிநொச்சி மக்கள் வழங்கிய மகஜர்

**மேன்மை தங்கியபேராயர் அவர்களே, ஆயர்களே!**

கிளிநொச்சியில் வாழும் கத்தோலிக்க மக்களாகிய நாம் நீங்கள் வன்னி மண்ணை தரிசிப்பதற்காக வருகை தந்தமையையிட்டு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். மிக நீண்ட நாட்களாக உங்கள் விஜயத்தை நாம் எதிர்பார்த்திருந்தோம். இப்போ தங்களுக்கு வணக்கம் செலுத்தி அன்புடனும் நல்வரவு கூறுகின்றோம்.

- இங்கு கிளிநொச்சியிலுள்ள பிரதான ஆலயத்துடன் சேர்த்து எமது 9 துணை ஆலயங்கள் உள்ளன.

கடந்த கால போரினால் மேற்குறித்த சகல ஆலயங்களும் முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ சேதமடைந்துள்ளது. எமது நிதிநிலை காரணமாக மீளக்கட்டியெழுப்ப முடியாத நிலையில் உள்ளளோம். இங்குள்ள புனித திரேசா ஆலயத்தின் புனரமைப்பு வேலைகளுக்காக மட்டும் யாழ் ஆயரின் உதவி கிடைக்கின்றது. ஏனைய ஆலயயங்களைக் கட்டியெழுப்புவதற்காக அரச நிறுவனங்களிடமிருந்தோ அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தோ எந்த உதவியும் கிடைக்கவில்லை.

★ **கத்தோலிக்க சின்னங்கள்/ அடையாளங்களின் அழிப்பு :**

- இரணைமடுமாதா ஆலயத்திற்குரிய 3 ஏக்கர் அளவிலான நிலம் அபகரிக்கப்பட்டு சிறிய அளவிலான ஆலயத்தின் பகுதியுடன் கூடிய சிறியளவு நிலம் மாத்திரமே பாவனைக்காக விடப்பட்டுள்ளது.
- மலயாளபுரம் ஆலயமோ அது இருந்த நிலமோ இருந்ததற்கான எந்த அடையாளமோ காணப்படவில்லை.
- 1983ல் Hudec நிறுவனத்தால் அகதிகளுக்காக பொன்னர் வாசம் எனும் மீளக்குடியமர்வு ஏற்படுத் தப்பட்டு ஆயிரம் வீடுகளும் கிணறுகளும் அமைக்கப்பட்டன. அத்துடன் அங்கு ஒரு மாதா கோவில் காணப்பட்டது. ஆயினும் தற்போது இவை எதுவும் கண்ணில் தென்படவில்லை.
- 1945ல் A 9வீதியில் பரடிப்போக்குச் சந்தியில் புனித மரியன்னையின் உருவச்சிலை கட்டியெழுப்பப்பட்டது. இது மீண்டும் ஐந்தாவது தடவையாக மிகுந்த சிரமத்தின் மத்தியில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

★ **மீள்குடியமர்வு :**

- நாம் மீளக்குடியமர்ந்து விட்டோம். ஆனால் எம்மில் இன்னும் பலர் முகாம்களில் கஸ்டமான வாழ்க்கை வாழ்கின்றார்கள்.
- எமது வீடுகள் முழுவதாகவோ பகுதியாகவோ சேதமடைந்து உள்ளன. 20% - 25% மக்கள் மட்டும் திருத்த உதவிகள் பெற்றுள்ளனர்.
- புதிய வீடுகள் பெற்றுக் கொணடவர்கள் வங்கிகளில் பெற்றுக் கொண்ட கடனுதவி பாதி வீடுகளைக் கட்டுவதற்கே போதுமாக உள்ளது.

★ **எமது கலாச்சாரம் :**

- கிறிஸ்மஸ் காலங்களில் நாம் 'கரோல' கீதங்கள் பாடி இனிப்புக்கள் வழங்குவோம். ஆனால் இந்த ஆண்டு இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கரோல் நிகழ்வில் ஆபாச சினிமாப் பாடல்கள் பாடப்பட்டு மதுபான வகைகள் விநியோகிக்கப்பட்டன. இது எங்கள் உணர்வுகளைக் காயப்படுத்தியுள்ளது.
- கிராமங்களில் மதுபானக் கடைகளும் புதிது புதிதாக திறக்கப்படுகின்றன.

இத்தகைய செயற்பாடுகள் திட்டமிட்டு செயற்படுத்தப்படுவது காலச்சார சரழிவாக எண்ணத் தூண்டுகிறது. சிறப்பாக இச்செயற்பாடுகள் இளைஞர்களை தேசிய, இனப் பிரச்சினைகளப் பற்றிச் சிந்திக்க விடாது திசை திருப்பும் செயற்பாடாக உள்ளது.

★ **பொருளாதாரம் :**

எமது வாழ்வாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. கிடைக்கும் மிகச் சிறிய ஊதியமும் தென்னிலங்கை வியாபாரிகளாலும் முதலீட்டுக் கம்பனிகளாலும் உறிஞ்சப்படுகிறது. அபிவிருத்திச் செயற் பாடுகளுக்கான மனித வலுவும் பிற பிரதேசங்களில் இருந்து பெறப்படுகிறது.

★ **அபிவிருத்தி :**

- A9 வீதி திருத்தியமைக்கப்பட்டதை மகிழ்வுடன் பாராட்டுகிறோம். ஆனாலம் இதன் பயனாளிகள் நாங்களா? அல்லது மற்றவர்களா? என்பது சந்தேகமே. ஏனெனில் A 9 வீதிக்கு வலது இடது புறங்களில எந்த அபிவிருத்தியும் தென்படவில்லை.
- A-32 மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இது A9 வீதியுள்ள இணைக்கப்பட்ட இடம் பாவனைக்கு உதவாத நிலையில் இருந்தும் அதைப் பயன்படுத்தும் கட்டாயதில் உள்ளோம்.

இவை யாவும் எமது சமய சமூக வாழ்வைப் பாதிப்பதாக உள்ளது. முக்கியமாக எமது பிள்ளைகளின் சமய அறிவைக் கூட்டுவதில் அக்கறைபடுத்த வேண்டியுள்ளது.

எமது பணிவான இவ்விண்ணப்பங்களை கவலை தோய்ந்த இதயத்துடன் உங்கள் கவனத்திற்கும், செபத்திற்கும் செயற்பாடுகளுக்கும் சமர்ப்பிக்ன்றோம்.

**கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

இவண்
கத்தோலிக்க விசுவாசிகள்
புனித. திரேசாள் ஆலயம்,
கிளிநொச்சி.

## துயர் பகிர்கிறோம்



கடந்த 40 வருடங்களுக்கு மேலாக எம் கத்தோலிக்க அச்சகத்திலும் சிறப்பாக பாதுகாவலன் பத்திரிகையிலும் பணியாற்றிய குருசுப்பிள்ளை யஸ்ரின் சிங்கராயர் கடந்த தை 10ம் திகதி காலமானார். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்பதுடன் இழப்பில் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**முகாமையாளர்,**
**பாதுகாவலன் ஆசிரியர்,**
**ஊழியர்கள்.**
**தூய வளன் கத்தோலிக்க அச்சகம்.**

## யுத்தம் முடிந்து... (1ம் பக்கம் தொடர்ச்சி)

இதற்குத் தடைகள் மற்றும் முட்டுக்கட்டைகள் எனபன தொடர்ச்சியாக இருக்கின்றன, அதேபோன்று தொழில் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, இங்குள்ள வர்த்தகர்களும் பாதிப்புக்களை எதிர் நோக்கி வருகின்றனர். மீன்பிடித் தொழிலின் பிரச்சினைகள் தொடர்ந்து இருந்து வருகின்றன.

அதாவது, இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகளால் இங்குள்ள மீனவர்களின் தொழில் நடவடிக்கைகள் உள்ளிட்ட வாழ்வாதார நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட உபகரணங்களை எமது கடல் பரப்பில் பயன்படுத்துவதால் கடல் வளங்களும் அழிவடைந்து வருகின்றன. இத்தகைய பிரச்சினைகள் தொடர்பாக இரு நாட்டு அரசுகளுக்கும் தெரியப் படுத்தப்பட்டுள்ளது. ஆயினும், இதற்கு தீர்க்கமான முடிவுக்கு இரு தரப்பினர்களும் வருகிற மாதிரியில்லை என்று கூறினேன். தமிழ் மக்கள் நிரந்தர அரசியல் தீர்வையே எதிர்பார்க்கின்றனர். ஆனால, யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் வழங்கப்படவில்லை. எனவே, அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டதாக ஆயர் குறிப்பிட்டுள்ளாா.

இனங்களுக்கிடையிலான ஒற்றுமை தொடர்பிலும் பிரான்ஸ் தூதுவர் வினவியிருந்தார். ஆயினும், இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது குறைவாகவே உள்ளதாக ஆயர் மேலும் தெரிவிக்கிறார்.

## உந்தன் நினைவினிலே... (1ம் பக்கம் தொடர்ச்சி)

அவர்கள் தலைமை தாங்கி சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது. இவ்வொலிப் பேழையின் மதிப்பீட்டு உரையினை புனித கென்றியரசர் கல்லூரி ஆசிரியர் எ.ஆர்.விஜயகுமார் திறம்படஆற்றினார். அருள்தந்தையர்கள், அருள் சகோதரிகள், இறை மக்கள் எனப்பலர் கலந்து இவ்வெளியீட்டு நிகழ்வைச் சிறப்பித்தார்கள்.

அருட்தந்தை செ.அன்புராசா அ.ம.தி அவர்களின் எழுத்துருவாக்கத்தில் அமைந்த இந்த இறுவட்டானது இறைபணியாளர்களான மேரிபஸ்ரியன், சந்திராபெனாண்டோ, கிளிகருணாரட்ணம், ஜெயராஜசிங்கம், செல்வராஜா சவிரிமுத்து, பாக்கியரஞ்சித், சறத்ஜீவன் யூஜின் யோண் கெபெட், ஜிம்பிறவுண், பிரான்சிஸ் யோசப் ஆகிய இறை பணியாளர்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டு இருந்தது ஒரு சிறப்பம்சமாகும். இவ் விறுவெட்டின் வெளியீடு அருள்தந்தைமேரி பஸ்ரியன் கொல்லப்பட்ட தை 06ஆம் நாளில் இடம்பெற்றது.

### ஓராண்டு நினைவுத் திருப்பலி

அமரர் அருட்பணி. இ.பீற்றர் துரைரட்ணம் அடிகளாரின் ஓராண்டு நினைவுத் திருப்பலி 25ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு அருள் ஆச்சிரமத்திலும், மாலை 5.00 மணிக்கு மயிலங்கூடல் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்திலும் ஒப்புக்கொடுக்கப் படும். அன்னாரின் ஆன்ம இளைப்பாறறிக்காக செபிக்க வேண்டுகின்றோம்.

- குடும்பத்தினர் -